**தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 117 - போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை ஜுலை 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு, அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கமளிப்பதால், பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருன்மையான தனமையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு, பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல், மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையில் பந்தி தொடர்ப்பு** | **செயற்பட்டிருக்காத பரிந்துரை** | **இந்த அறிக்கையில் பந்தி தொர்ப்பு** |
|---|---|---|
| 1.6.1 | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் மூலதன செலவினம் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்ய வேண்டியமை. | 1.6.1 |

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதியல்லா சொத்துக்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 ஜுன் 28 ஆம் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை 01/2017 ஆம் இலக்க பிரகாரம் பேக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 2506 அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மூலதனசெலவுகளிலிருந்து ரூபா 187,170 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் போது சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தி கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதனை எவ்வாறாயினும் 2023 ஆண்டில் முடிவுறுத்த உச்ச முயற்ச்சி எடுக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் மூலதன செலவுகள் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்தவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் தலைப்பின் கீழ் 27 செலவு விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,149.41 மில்லியனான மொத்த தேறிய ஏற்பாட்டு தொகை பயன்பாடின்றி சேமிக்கப்பட்டிருந்தது | ஏற்றுக் கொள்கிறேன். | நிதிப் பிரமாணம் 50 பிரகாராம் நிதியான்டினுள் நியாயமாக கணப்படும் கொள்ளளவு பிரகாரம் வழங்க முடியுமான சேவையற்காக முடியுமான அளவில் பூர்னமான மற்றும் சரியான செலவின மதிப்பீடு தயாரிப்பது முகாமைத்தவத்தின் பொறுப்பாகும். |
| (ஆ) | நிகழ்ச்சி திட்டம் 01 கீழ் மீண்டுவரும் செலவின விடயங்கள் 20 மற்றும் 03 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த முறையே கூட்டுத் தொகை ரூபா 48.78 மில்லியன் மற்றும் ரூபா 1.6 மில்லியன் ஏற்பாட்டில் இருந்து ரூபா 33.66 மில்லியன் மற்றும் ரூபா 1.26 மில்லியன் ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த சேமிப்பு 50 சதவீதம் முதல் 99 சதவீத வீச்சளவில் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | -மேற்படி- |
| (இ) | நிகழ்ச்சி திட்டம் 02 இன் கீழ் 48 மூலதன செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டு இருந்த கூட்டுத்தொகை ரூபா 64,946.31 மில்லியன் ஆன ஏற்பாட்டில் இருந்து கூட்டுத்தொகை ரூபா 46,777.61 மில்லியன் ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த சேமிப்பு 50 சதவீதம் முதல் 99 சதவீத வீச்சளவில் காணப்பட்டது. | ஏற்றுக் கொள்கிறேன். | -மேற்படி- |
| (ஈ) | மேற்குறிப்பிடப்பட்டவாறு மூலதன செலவு விடயம் 75 இன் ஏற்பாட்டிலிருந்து ரூபா 49,928.28 மில்லியன் சேமிக்கப்பட்டதன் மீது அமைச்சு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட பதுள்ளை - செங்கலடி நெடுஞ்சாலையை புனர்நிர்மாணம், பேஸ்லைன் நெடுஞ்சாலை மூன்றாம் கட்டம் ஆகிய பிரதான கருத்திட்டங்களை இடைநிறுத்துவதற்கு மற்றும் சில கருத்திட்டங்களில் குறைந்த | நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமை இறுதி பட்டியல் கொடுப்பனவு தாமதிப்பதற்கு தாக்கம் செலுத்தப்பட்டது. | ஏற்பாட்டை உரிய காலத்தினுள் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் |

செயலாற்றுகைக்கு இந்த நிலைமை நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை தினந்தோறும் பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், போதியளவில் முற்பணம் கிடைக்காமை, இடைக் கொடுப்பனவு சான்றிதழிற்காக (IPC) கொடுப்பனவு செய்திருக்காமை மற்றும் கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாரான தீர்க்கப்படாத கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 45,750.11 மில்லியனாக இருந்தது. | போதியளவில் முற்பணம் கிடைக்காமை மற்றும் கொடுப்பனவு செய்வதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்ட இடைக் கொடுப்பனவு சான்றிதழிற்காக (IPC) கொடுப்பனவு செய்யப்படாமை இதற்கு காரணமானது. | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டை தினந்தோறும் பரீட்சித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூ. மில்லியன் | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் - 104(4) | - | வாகன விபத்துக்கள் மீதான விசாரணையின் பின், நட்டசேதம் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களிற்குள் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் போக்குவரத்து பிரிற்குரிய 8 வாகன விபத்துக்கள் தொடர்பான | முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | முழுமையான அறிக்கைகள் 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | 17.78 | கிராமிய பாதைகள் அபிவிருத்தி பிரிவிற்குரிய ஜீப் வண்டியொன்று 2022 திசெம்பர் 24 திகதி விபத்திற்குள்ளாது தொடர்பாக நிதிப் பிரமாண பிரகாரம் தேவையான செயற்பாடுகளை எடுத்திருக்காதுடன் திருத்தத்திற்கான மதிப்பீடு ரூபா 17.78 மில்லியன் என அவதானிக்கப்பட்டது. | நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த ரூபா 2 மில்லியனான ஏற்பாட்டை பொது திறைசேரியிடமிருந்து கோரப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுத்து நட்டத்தை, பொறுப்புவாய்ந்த நபரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 571(2) | 0.225 | காலவதியான வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும், இரண்டு ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 0.035 மில்லியனான டென்டர் வைப்புக்கள், கூட்டுத் தொகை ரூபா 0.19 மில்லியனான நிறுத்தற் பணம் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்டத்தை அறிவுறுத்த குறித்துக் கொண்டேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவச் சுற்றறிக்கை | - | அரசிற்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் அந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் பதிவுரிமையின்றி பயன்படுத்தப்படும் வாகனங்களின், பதிவுரிமையுள்ள நிறுவனத்தின் ஒப்புதலுடன் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்துகொள்ள அல்லது பதிவுரிமையுள்ள நிறுவனத்திற்கு முறையாக ஒப்படைக்க | அமைச்சிற்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படும் வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்டதால் கடமை தேவைபாடு மீது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அவ்வப்போது சில வாகனங்கள்கள் பெற்றுக்கொண்டுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய ஒழுங்காக வாகனங்களை பயன்படுத்த வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறாயினும் அதற்கு மாற்றமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான 10 வாகனங்கள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் பயன்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி கேவை – 2006 இன் 5.4.4 பந்தி | 4.63 | ஒப்பந்ததாரருக்கு செய்யப்படும் கொடுப்பனவுகள், ஒப்பந்த பெறுமதியின் 90 சதவீதம் பூர்த்தியாக முன்னர் வேலை ஆரம்ப முற்பணத்தை முற்றாக அறவிட வேண்டிய போதும், மாதறை மாவட்டத்தில் 04 கிராமிய பாலங்களின் கொடுப்பனவுகள் செய்து பூர்த்தியாகி இருந்த போதும் அதற்காக அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்த முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 4.63 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட்டிருக்கவில்லை. | அறவிட முடியாமல் போன முற்பணத் தொகையை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | பெறுகை வழிகாட்டியின் ஏற்பாடு பிரகாரம் முற்பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் 2021 மார்ச் 17 திகதிய இலக்கம் எஸ்எம்ஆர்ஆர்/பீஎல்/01/சீஅய்ஆர் கொண்ட சுற்றறிக்கை | | | | |
| (i) | 03 பிரிவு | - | கருத்திட்டங்களை தெரிவு செய்யும் போது பெறுமளவு உப பாதைகளிற்கு உட்பிரவேசத்துடன் | பிரதேச மக்களிற்கு மிக்க நள்ள வாழ்கை நிலையொன்றை பெற்றுக் கொடுக்கும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைள எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கூடிய, அதிகமான குழும்பங்களிற்கு நலன்களை வழங்க முடியமான பாதைகளை தெரிவு செய்ய வேண்டிய போதும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. எடுத்துக் காட்டாக கண்டி மாவட்டத்தில் 04 நலனாளர் குடும்பங்கள் மாத்திரம் வசிக்கும் பாதையொன்றை தெரிவு செய்திருந்ததுடன் வடமாகாணத்தில் புலியங்கோவில் பாதை பாலத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தில் 15 குழும்பங்கள் மாத்திரம் நல்னபெறும் பாதையொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. | நோக்கில் இந்த பாலத்தை நிர்மாணிக்க தெரிவு செய்யப்பட்டது. | |
| (ii) | 04 பிரிவு | - | அனைத்து கிராமிய உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் கருத்திட்டங்களை அபிவிருத்திக்காக தெரிவு செய்ய வேண்டிய போதும் கண்டி மாவட்ட துன்பனே பிரதேச அதிகார பிரதேசத்திற்குரிய ஹதரலியத்தே பிரதேச செயலக பிரிவில் 15 பாதைகள் மாத்திரம் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நிறுவனங்களினால் கோரியுள்ள உத்தேசங்களிற்கு மாத்திரம் மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டடுள்ளது . | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைள எடுக்க வேண்டும். |
| (iii) | இணைப்பு A–3 2.1 பந்தி | - | கொங்கிரீட் கலவையின் பொழிப்பு சக்தி 30 நியுடன்களாக இருக்க வேண்டிய போதும் கண்டி மாவட்டத்தில் 15 பாதைகளிற்குரியதாக மாதிரியாக பெற்றுக் கொண்ட 117 கொன்கிரீட் பகுதிகளில் 62 கொன்கிரீட் பகுதிகளின் பொழிப்பு சக்தி 30 நியுடன்களை விடவும் குறைந்த மட்டத்தில் | கொங்கிரீட் கலவையிடும் பாதைகளின் பொழிப்பு சக்தி $25N/mm^2$ ஆக இருக்க வேண்டுமென இலக்கம். SMRR/PL/01/Cir கொண்ட கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய பாதைகளின் தரம் தொடர்பாக அறிமுகம் செய்துள்ள குறைந்தபட்ச தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாக முகாமைத்துவ உறுதி செய்து கொள்ள வேண்டும். |

காணப்பட்டதுடன் பொலன்னறுவ மாவட்டத்தில் எலஹர பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட 05 பாதைகளில் 03 பாதைகளின் கொன்கிரீட் பகுதிகளின் பொழிப்பு சக்தி 30 நியுடன்களை விடவும் குறைவாக இருந்தது.

### 2.4 வைப்புக்கள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| போக்குவரத்து பிரிவிற்குரிய இலக்கம் 6000-0-0-002-0-159-0 கொண்ட பொது வைப்பு பேரேட்டில் குறிப்பிடப்படும் ஆண்டின் வரவு மற்றும் செலவு வைத்தல்களிற்கும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கும் ஏசீஏ-4 படிவத்தில் குறிப்பிடப்படும் பெறுமதிகளிற்கிடையில் ரூபா 0.505 மில்லியனான விலகலொன்று அவதானிக்கப்பட்டது. | தவறுதலாக போக்குவரத்து பிரிவின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களிற்குரிய வரவு மற்றும் செலவு வைத்தல்கள் உள்ளடக்கப்படவில்லை. | வொது வைப்பு பேரேட்டின் குறிப்புக்களை நிதிக்கூற்றுக்களின் குறிப்புக்களுடன் ஒப்பிட்டு தேவையான சீராக்கங்களை செய்ய வேண்டும். |

### 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் "பீ"கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சு, திணைக்கள் மற்றும் மாகாண சபை நிறுவனங்களிற்கு இடையில் இடமாறிச் சென்ற அலுவலர்களின், மரணத்த, ஓய்வு பெற்ற, வேலைத்தடைக் உட்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்றிருந்த 11 அலுவலர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய ரூபா 1.152 மில்லியனான கடன் மீதிகளை அறவிட அமைச்சுக்கு இயலாதிருந்தது. | இந்த ஒவ்வொறு கடன் மீதிகளையும் தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதுடன் அறவிட முடியாத கடன் மீதிகளை இந்த ஆண்டில் பதிவழிக்க பொது திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த கடன் மீதிகளை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த நலன்களை (Outcome) அடைந்து கொள்ளாமை

#### (அ) கொழும்பை அன்மித்த புகையிரத கருத்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | எதரிவரும் 20 ஆண்டுகளில் புகையிரத போக்குவரத்து கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்பின் கீழ் ஐ.அ.டொ 8 மில்லினால் அதாவது ரூபா 1,505.93 மில்லியன் செலவில் புகையிரத பாதைகள் கட்டமைப்பை மேம்படுத்துவது தொடர்பாக சாத்தியப்பாட்டு ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த சாத்தியப்பாட்டு அறிக்கை 2021 மார்ச் மாதத்தில் வரிசை அமைச்சினூடாக புகையிரத திணைக்களத்திற்கு வழங்கியிருந்ததுடன் இந்த ஆய்வை பூர்த்தி செய்திருந்த போதும், சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்காததால் செலவிட்ட பணத்திற்கு ஒப்பாக பிரதிபலன் ஒன்று கிடைத்திருக்காததுடன் மீளாய்வாண்டினுள் கடன் தவணைகளிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்திட்டத்தை செயற்படுத்த இலங்கை புகையிரத திணைக்களத்தற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | தேசிய தேவைபாடுட்டு முன்னுரிமை அடிப்படையில சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கை பிரகாரம் கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | களிணி வெலி புகையிரதப் பாதையை விரிவுபடுத்தும் நோக்கில் அப் பாதையின் இருபுறமும் குடியிருக்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி அவர்களிற்காக 1,244 வீடுகளை நிர்மாணிக்க ரூபா 9,600 மில்லியன் ஏற்பாட்டை ஒதுக்க அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. 3 ஆண்டுகளான இக் கருத்திட்ட காலம் 2021 திசெம்பர் மாதம் முடிவடைந்த போதும், அத்திகதியளவில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களிற்காக 694 வீடுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது எதிர்பார்த்த இலக்கின் 56 சதவீதம் மாத்திரமாகும். கருத்திட்டம் பூர்த்தியானதன் காரணமாக இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை மீள் குடியமர்த்துவது பிரச்சினைக்குரிய முடியுமென அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் ஏற்பாட்டை ஒதுக்கிக் கொண்டு இப்பணியை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | கருத்திட்ட காலத்தினுள் திட்டமிட்ட பணிகளை பூர்த்தி செய்ய வேண்டியதாக. |

**3.2 கருத்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

**(அ)** ஒன்றிணைந்த **பேருந்து நவீனமயமாக்கல் கருத்திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பொது போக்குவரத்திற்காக மக்களின் கவர்ச்சியை அதிகரிப்பதனை நோக்காகக் கொண்டு முழுத் தீவும் காவுகை செய்யப்படும் வகையில் 23,000 அனவான பேருந்து வண்டிகள் 2018 முதல் 2023 காலத்தினுள் நவீனமயமாக்க ரூபா 26,860 மில்லியனான மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் 2022 ஆண்டு இறுதி வரையும் அவற்றிலிருந்து செலவிடப்பட்டிருந்தது ரூபா 248.8 மில்லியன் மாத்திரமே. அது மொத்த மதிப்பீட்டுத் தொகையின் 1 சதவீதம் மாத்திரமே ஆகும். | செலவிடப்பட்ட ரூபா 298.8 மில்லியனில் இருந்து GPS உபகரணங்கள் மற்றும் OCC உபகரணங்களை கொள்வனவு செய்ததற்கு மேலதிகமாக எஞ்சிய அனைத்து செலவுகளும் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் நிர்வாக செலவிற்காக செலவிடப்பட்டுள்ளது. | திட்டமிட்டவாறு கருத்திட்டத்தை செயற்படுத்த முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | கருத்திட்டத்திற்காக செலவிட்டிருந்த ரூபா 248.8 ஆன மொத்த செலவில் 73 சதவீதம் அதாவது ரூபா 180.9 மில்லியனிற்கு அண்டிய தொகையொன்று கருத்திட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்கு செலவிடப்பட்டிருந்தது. | ரூபா 67.9 மில்லியனும் எஞ்சிய கருத்திட்ட முகாமைத்துவ அலகிற்காக செலவிடப்பட்டுள்ளது. | கருத்திட்ட நிதியத்தை சிக்கனத்தன்மையுடன் கூடியதாக பயன்படுத்த வேண்டும். |
| (iii) | கருத்திட்டத்தின் செயற்திறனின்மை காரணமால் அரசினால் கருத்திட்டத்தை இடைநடுவே நிறுத்தியிருந்ததுடன் அதன் போது கொள்வனவு செய்திருந்த 1465 GPS இயந்திரங்களில் 1279 தேசிய போக்குவரத்து ஆணைகுழுவிற்கும் 183 கடவத்த பல்நோக்கு பேக்குவரத்து நிலையத்திற்கும், 3 மேல் மாகாண போக்குவரத்து அதிகார சபையிற்கும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. | ஒன்றிணைந்த கருத்திட்டம் மூலம் 1462 GPS இயந்திரங்களை கொள்வனவு செய்துள்ளதுடன் அவற்றில் 500 தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கும் எஞ்சிய 962 GPS இயந்திரங்களை ஒவ்வொரு நிருவனங்களின் கோரிக்கையை கவனத்திற்கொண்டு, ஒப்படைக்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. | கருத்திட்ட நடவடிக்கைகளை அதன் நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் வினைதிறனாக இயக்க வேண்டியதென. |

**(ஆ) குருணாகலை ஹபரன புகையிதரப் பாதை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தம்புள்ளை பொருளாதார மத்தியநிலையத்தை மையமாக கொண்டு குருணாகலையிலிருந்து தம்புள்ளை ஊடாக ஹபரணை வரை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த புதிய புகையிரத பாதையின் இருபுறமும் காணி சுவீகரிப்பிற்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2022 வரை மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிலருந்து ஒதுக்கியிருந்த ரூபா 1,459 மில்லியன் தொகையிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதியில் ரூபா 575.83 மில்லியன் அதாவது ஏற்பாட்டுத் தொகையில் 39 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | அரசுக்கு செலவுச் சுமையின்றி கருத்திட்டத்துடன் தொடர்பான பல பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | கருத்திட்ட நிதியேற்பாடு அதன் நோக்கங்களை அடைய வினைதிறமையாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | இக்கருத்திட்டத்திற்குரிய 57 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 4,392 காணிகளை சுவீகரிக்க உத்தேசிக்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி யன்று 149 காணிகள் மாத்திரம் முறையாக பணம் செலுத்தி சுவீகரித்திற்கொள்ளப்பட்டுள்ளன. | 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை இந்த புகையிதரப் பாதை நிர்மாணிப்பதற்குத் தேவையான 57 கிராம சேவகர் பிரிவுகளிற்கு சொந்தமான 4,400 காணி துண்டுகளின் 4,392 காணி துண்டுகள் அரசிற்கு சுவீகரித்திற்கொண்டிருந்தது. | கைப்பற்ற காணி முறையாக சுவீகர்த்திற்கொண்டு தேவையான பாதுகாப்பு வேலைதிட்டத்தை செயல்படுத்த வேண்டும். |
| (iii) | 2016 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை காணிகளை சுவீகரிக்கும் செலவினமாக ரூபா 349.06 மில்லியன் உட்பட ஒட்டு மொத்த கருததிட்டத்திற்காக ரூபா 568 மில்லியனான மொத்த செலவினமொன்று மேற்கொள்ளப்படடிருந்த போதும், இந்த கருத்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டளவில் முதலீட்டாளர்களை அல்லது நிதியீட்ட வழிகளை இனங்கண்டு இருக்கவில்லை. மேலும், கருத்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தாதிருக்க அரசினால் கொள்கை ரீதியாக தீர்மானித்ததன் காரணமாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட மொத்த தொகை விளைவற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது. | இலக்கம் அமப/23/0482/608/037 மற்றும் 2023 மார்ச் 27 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் கருத்திட்டத்தை மூடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கருத்திட்டங்கள் ஆரம்பிக்க முன்னர் நிதயீட்டல் வழிகளை தீர்மானிக்க வேண்டும். |

**3.3 வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தி வேலைகளிற்காக உள்நாட்டு வங்கி ஊடாக கடன் பெறல்**

2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை வீதி அபவிருத்தி அதிகார சபையினால் உள்நாட்டு வங்கி ஊடாக ரூபா 408,541.01 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ 44.72 மில்லியன் பெறுமதியான கடன் உடன்படிக்கைகளிற்கு உட்பட்டிருந்தன. இந்த கடன் தொகை மத்திய அதிவேக வீதி கருத்திட்டம் I மற்றும் II, கொழும்பு கட்டுநாயக அதிவேக வீதி, வெளிச் சுற்றுவட்ட வீதிக் கருத்திட்டம் III மற்றும் கிலோ மீற்றர் 100,000 கிராமிய பாதை கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு வழங்கியுள்ள தகவல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியளவில் உள்நாட்டு வங்களிடமிருந்து பெற்ற கடன்களிலிருந்து மீள் செலுத்த வேண்டியுள்ள கடன் அளவு ரூபா 356,059.32 மில்லியனாக இருந்ததுடன் 05 ஆண்டு காலத்தினுள் உள்நாட்டு வணிக வங்கிகளிற்கு செலுத்த வேண்டியதான வட்டி அளவு ரூபா 109,333.11 மில்லியனாகும். மேலும், கடன் பெற்ற 07 உள்நாட்டு வங்கிகளிற்கு 2022 திசெம்பர் 31 திகதியளவில் செலுத்த வெண்டியதான வட்டி, தண்ட வட்டியுடன் ரூபா 37,668.72 மில்லியனானதுடன், நிலுவையாக உள்ள கடன் தவணைகளின் பெறுமதி ரூபா 2,502.39 மில்லியன் ஆனது. | ஏற்றுக் கொள்கிறேன். | கருத்திட்டத்திற்காக சரியான சாத்தியப்பாட்டு ஆய்வொன்றுடன் மற்றும் கிரய நலன் பகுப்பாய்வொன்றின் பின்னர் செயற்படுத்த வேண்டிய கருத்திட்டத்தை இனங்காணல் மற்றும் குறைந்த கிரயத்துடன் குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் முகாமையின் பொறுப்பாகுமெனு. |
| (ii) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2½ ஆண்களிற்கும் 4½ ஆண்டுகளிற்கும் இடையிலான நிவாரண காலமொன்றின் அடிப்படையில் 10 ஆண்டுகளிற்கும் 18 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தினுள் செலுத்தி முடிக்கும் அடிப்படையில் 07 உள்நாட்டு வணிக வங்கிகளிலிருந்து 34 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 408,541.01 மில்லியனில் இருந்து 2022 திசெம்பர் 31 திகதியளவில் மேலும் செலுத்த வேண்டியிருந்த ரூபா 356,059.31 பெறுமதியான கடன், தவணைகளை செலுத்தும் காலத்தை மேலும் நீடித்து 2020 | ஏற்றுக் கொள்கிறேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 13 திகதிய இலக்கம் MFE/ERD/14/CM/2020/065 கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து கடன்கள் மீள்பரிசீலணை செய்யப்பட்டிருந்தன. மீள்பரிசீலணைக்கான மதியுரை பெற்றுக் கொய்வதற்காக மக்கள் வங்கிக்கு ரூபா 10.80 மில்லியன் மதியுரை கட்டணம் செலுத்தியிருந்ததுடன் கடன்களை மீள்பரிசீலணை செய்திருந்ததால் வருடாந்தம் அதிகரித்த வட்டி வகிதத்தின் மீது ரூபா 400.74 மில்லியன் மேலதிக வட்டித் தொகையொன்றை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | |
| (iii) | உள்நாட்டு வங்கிகளிலிருந்து பெற்ற கடன் தொகையிற்காக கடன் வட்டி மற்றும் தவணையாக 2022 திசெம்பர் 31 திகதியன்று நிலுவையாக இருந்த அத்தொகையை தீர்ப்பதற்காக திறைசேரிக்கு ஏற்பாடு வழங்க முடியாததன் மீது ரூபா 36,671.62 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும் உள்நாட்டு வங்கிகளின் மூலம் பெற்றுக் கொண்டதற்கு மேலதிகமாக 100,000 கிலோ மீற்றர் பாதைகள் வேலைத் திட்டத்திற்குரிய பாதைகள் நிர்மாணப் பணிகளிற்காக 36 ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தவுள்ள ரூபா 32,217.89 மில்லியனிற்காகவும் 2022 திசெம்பர் 31 திகதியளவில் 20.0 முதல் 22.5 வரையான வட்டி விகிதத்தின் கீழ் திறைசேரி முறிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு ரூபா 68,889.51 மில்லியனான திறைசேரி முறிகள் விநியோகித்தனால் அரசிற்கு மேலதிக செலவொன்றை மேற்கொள்ள நேர்ந்ததுடன் அச்செலவு அண்ணளவாக ரூபா 15,155.69 மில்லியனாகும். | இவ்விடயங்களின் கீழ் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் ரூபா 36,671.62 மில்லியன் பெறுமதி என்பது 2022 ஆண்டிற்கே உரிய கடன் வட்டி மற்றும் தவணைகளை தீர்ப்பதற்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகள் ஆகும். | - மேற்படி - |

## 3.4 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள்

### 3.4.1 ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 07 ஆண்டுகள் கடந்திருந்த போதும் 7 தேசிய வீதிகளின் 126.27 கீ.மீ. மற்றும் கிராமிய வீதிகள் 566 இன் 2291 கி.மீ மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 30 ஒப்பந்த பொதிகளிற்குரியதாக 4 தேசிய வீதிகளின் 27.43 கி.மீ நீளம் மற்றும் 558 கிராமிய வீதிகளின் 2,219.96 கி.மீ நீளம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைத்திருந்தது. | 04 தேசிய வீதிகளின் 27.43 கி.மீ நீளம் மற்றும் 558 கிராமிய வீதிகளின் 2,219.96 கி.மீ நீளம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைத்திருந்தது. | இலக்குவைத்த முன்னேற்றத்தை அடைந்து கொள்ள வினைத்திறனாக கருத்திட்டத்தை இயக்க வேண்டும். |
| (ஆ) | இக்கருத்திட்டத்தின் கீழ் இரத்துச் செய்யப்பட்ட R1, R2, KE1 மற்றும் MA 1 ஆகிய ஒப்பந்தப் பொதி 04 இல் மீகுதி வேலைகளை கி.மீ 100,000 கிராமிய பாதைகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தோல்வியுற்ற ஒப்பந்ததாரர்களை கறைநிரற்பட்டியல் படுத்துவதற்கு பதிலாக அவர்களிடமிருந்தே மேற்கொள்வதற்கு ஒருமைப்பாட்டு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருந்ததுடன் ஆரம் ஒப்பந்த விலையுடன் ஒப்பிடுகையில் அவ் ஒப்பந்தங்களின் பெறுமதி ரூபா 580.14 மில்லியனால் அதிகரித்து காணப்பட்டது. அதன் பிரகாரம் வேரொறு கருத்திட்டத்தினூடாக குறித்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்த ஒப்பந்ததாரரிற்கு வாய்ப்பினை வழங்குவதனூடாக தோல்வியுற்ற ஒப்பந்ததாரறிற்கு முறையற்ற நிதி ஏற்பாடொன்றை வழங்கியிருந்ததுடன் புதிய உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 15 மாதங்களிற்குள் மீதியான வேலைகளை பூர்த்தி செய்ய உடன்பட்டிருந்தது. அவ்வாறாயினும் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதி முதல் 2022 திசெம்பர் 31 திகதியளவில் 29 மாதங்கள் கடந்திருந்த போதும் இந்த பொதிகளில் 18 சதவீதத்திற்கும் | மேற்குறிப்பட்ட கருத்திட்ட செலவின விடயத்தை திருத்தி ஒருமைப்பாட்டு உடன்படிக்கையின் கீழ் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது அதன் பிரகாரம் எதர்காலத்தில் கிடைக்கும் நலன்களின் மீது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நேர் தொழல் ஊழியத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | சரியான பெறுகைகள் முறைமையொன்றின் மூலம் பொருத்தமான ஒப்பந்ததாரர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 50 சதவீதத்திற்கும் இடையிலான ஆகக் குறைந்த முன்னேற்றத்தை மாத்திரம் அறிக்கையிட்டிருந்தது. மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் குறைந்த முன்னேற்றத்துடன் இந்த பாதையை பயன்படுத்தும் பொது மக்கள் 07 ஆண்டுகளாக பாரிய அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களிற்கு நிலவுகின்ற சட்ட விதிகளிற்கு மாற்றமாக மீண்டும் அந்த ஒப்பந்தத்தை வழங்கியதன் மூலம் நோக்கத்தின் படி கருத்திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்த முடியாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | ஒப்பந்த விபரக்குறிப்பின் உபபிரிவு 108.4 இன் பிரகாரம் பிரதான மற்றும் கள ஆய்வுகூடங்களின் ஆய்வுகூட உபகரணம் மற்றும் தளபாடங்கள் நிகழ்ச்சித்திட்ட முடிவில் ஒப்பந்ததாரரிற்கு திருப்பி அனுப்பவேண்டியிருந்த போதும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 RMC பொதிகளில் மற்றும் 16 கிராமிய பாதை பொதிகளில் அவ் உருப்படிகளிற்காக ரூபா 397.77 மில்லியன் ஒரே முறையில் (Lump Sum Payment) செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி இந்த வழமைக்கு மாற்றமான ஒப்பந்த நிபந்தனைகள் மூலம் ஒப்பந்ததாரரிற்கு அதிகபட்ச நலன்களை பெற்றுக் கொள்ளும் இயலுமை கிடைத்திருந்தது. | எதிர்வரும் ஒப்பந்தங்களில் இநத உருப்படியை அகற்றுவதற்கு காணப்படும் இயலுமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்த நிபந்தனைகளை அரசிற்கு தீங்கு விழைவிக்காத வகையில் தயாரிப்பது குறித்த அலுவலர்கள் மற்றும் முகாதைத்துவத்தின் பொறுப்பாவதெனை. |
| (ஈ) | ஒப்பந்தத்தின் விஷேட நிபந்தனையின் 14.6 உப பிரிவு பிரகாரம், ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதின் 1.5 சதவீதமாக இருக்க வேண்டிய போதும், மீளாய்வண்டினுள் RMC 22 பொதிகளின் கீழ் தேவையான குறைந்தபட்ச எல்லையை விட குறைந்த பெறுமதியுடன் கூடிய இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களை பரிசீலனை செய்யும் போது 131 சந்தர்ப்பங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 1,637.27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையின் மீது ஒப்ந்தத்தை தொடர்ந்து பேணிச் செல்வதற்கு இவ்வாறு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிபந்தனைகளின் எல்லைகளை பின்பற்ற வேண்டியதா மற்றும் அந்த எல்லைகளை மாற்றுவதற்கு உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வீதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் பலவீனமா முன்னேற்றம் காரணமாக பயன்படுத்தப்படாத கடன் மீது கடப்பாட்டுக் கட்டணமாக (Commitment charges) ஐ.அ.டொ 1.13 மில்லியனிற்கு சமமான ரூபா 183.52 மில்லியன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் சிக்கனமற்றதாக கடன் மானிய முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | கடன் தொகையை குறித்த காலத்தினுள் வினைத்திறனாக பயன்படுத்திக் கொள்வதன் மீது கடப்பாட்டுக் கட்டணத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தொகையை திட்டமிட்ட காலத்தினுள் பயன்படுத்திக் கொள்ள முகாமைத்துவத்தினால் நடவடிககை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மிள் கையளிக்கப்பட்ட 06 ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட 2022 திசெம்பர் 31 திகதி அறவிடப்படாத ரூபா 1,453.09 மில்லியனான வேலை ஆரம்பு முற்பணம் மற்றும் மேலும் 02 கைவிடப்பட்ட ஒப்பந்த பொதிகளுடன் தொடர்புபட்ட மீள் அறவிடப்படாத ரூபா 377.07 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முற்பண விளைவற்ற செலவொன்றாக அமைய முடியுமென அதவானிக்கப்பட்டது. | நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்த பின்னர் முன்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

### 3.4.2 இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்ட வசதியளிப்பு நிர்வாக கையேட்டின் பிரகாரம் வடக்கு, கிழக்கு, ஊவா மற்றும் மேல் மாகானங்களிலுள்ள 36 தேசிய வீதிகளின் 417.75 கி.மீ கள் மற்றும் 1349 கிராமிய வீதிகளின் 3338.87 கி.மீ களின் வீதி புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட போதும், 13 தேசிய வீதிகளின் 153.74 கி.மீ கள் மற்றும் 557 கிராமிய வீதிகளின் 1432.42 கி.மீ கள் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே 2022 திசெம்பர் 31 திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் கருத்திட்டத்தில் ஊவா, கிழக்கு மற்றும வடக்கு மாகானங்களின் வீதி புனரமைபு நடவடிக்கைகளில் ஆரம ஒப்பந்த காலமான 720 நாட்களில் 444 நாட்களிற்கும் 530 நாட்களிற்கும் இடையிலான காலம் கடந்திருந்த போததுடன் ஒவ்வொறு மாகாணத்திலும் ஒப்பந்த நடவடிக்கைகளை பூர்த்தி | ஊவா கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் வீதி புனரமைப்புப் பணிகள் முடிவடைந்ததன் வீதம் முறையே 60, 84 மற்றும் 86 சதவீதமாகும். | நிகழ்சித்திட்டத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள வினைதிறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் முன்னேற்றம் முறையே 60, 84 மற்றும் 86 சதவீதமாக இருந்தது. | | |
| (ஆ) | நிகழ்சித்திட்டத்தின் பெறுகைகள் திட்டம் பிரகாரம் மேல் மாகாணத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 11,205 மில்லியனான 08 தேசிய வீதிகளின் கி.மீ 73.4 புனர்நிர்மாணத்திற்குரிய ஒப்பந்த வழங்கல் 2021 செப்டம்பர் 15 திகதியன்று பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும் மீளர்யவாண்டு இறுதியளவில் பெறுகைகள் நடவடிக்கைகளிற்கு 15 மாதங்களுக்கு அதிக காலமொன்று கடந்திருந்த போதும் NR-01 மற்றும் NR-03 பொதிகளை தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் வேலைத்திட்டத்தில் காணப்பட்ட நிதி நிலைமையின் அடிப்படையில் 04 கட்டங்களிற்குரிய (Tranche - 04) நிதியீட்டல் செய்யப்படும் வரை ஒப்பந்த வழங்கல் இடைநிறுத்தப்பட்டது. எனவே எதர்காலத்தில் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான கேள்வி விலைகளின் செல்லுபடியாகும் தன்மை சிக்கலாக இருக்குமென அவதானிக்கப்பட்டது. | நிதியங்களில் காணப்படும் பற்றாக்குறை காரணமாக இந்த கருத்திட்டத்தின் கீழ் ஒப்பந்தங்கள் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த தவணைக்கான (Tranche) கடன் ஒப்பந்தம் 2023 திசெம்பர் வரை தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட உடனே ஒப்பந்தம் வழங்குவது குறித்த தீர்மானமொன்று எடுக்கப்படும். | திட்டங்களின் பிரகாரம் ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றத்தை அமைந்து கொள்ள முடியுமான நடவக்கைகளை மேற்கொள்ள வேண்டியதென. |
| (இ) | வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் 04 மாகாணங்களில் கிராமிய வீதிகள் புனர்நிர்மாணம் தொடர்பாக செயற்படும் 53 ஒப்பந்தப் பொதிகளில் 46 பொதிகளுக்காக கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பொதிகளின் காலம் நீடிக்கப்பட்டிருந்த தடவைகள் 1 முதல் 30 வரையான பெறுமானத்தை கொண்டிருந்தது. ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பான ஒப்பந்தப் பொதிகளில் 57 நாட்களில் இருந்து 684 நாட்கள் வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப ஒப்பந்த காலமான 730 நாட்களின் 8 முதல் 94 வீதத்திற்கு இடையிலான வீச்சளவில் காணப்பட்டது. | கோவிட்-19 தொற்று நோய்யுடன் விதிக்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்கள் மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள், எரிபொருள் பற்றாக்குறையின் மீது விதிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் விநியோகக் கட்டுப்பாடுகள் காரணமாக அவ் வப்போது கால நீட்டிப்புகளை (EOT) வழங்க நேரிட்டது. | கால நீட்டிப்பு தொடர்பான விடயங்களை ஆய்வு செய்த பின்னர் கால நீட்டிப்புகளுக்கு அங்கீகரிக்க வேண்டுமென. |
| (ஈ) | அரச பெறுகைகள் கையேட்டின் பிரிவு 7.9.2 இன் பிரகாரம் கிடைக்கப் பெற்ற குறைந்தபட்ட கேள்வி விலையின் பெறுமானத்தை பொறியியலாளர் மதிப்பீடு கவனிக்கத்தக்க எல்லையால் மிஞ்சியிருப்பின், திருப்தியடைய முடியுமான கேள்வி விலையை பெற்றுக்கொள்ள பெறுகைகள் | மதிப்பிடப்பட்ட கேள்வி விலைகள் உயர் பெறுமானத்தை எடுப்பதால் NR1, NR2, மற்றும் NR5 பொதிகளிற்காக கலந்துரையாடி விலைகள குறைத்துக் | பெறுகைகள் வழிகாட்டியில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல் பிரகாரம் விலைகளை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தினால் புதிய கேள்வி விலையை கோர அல்லது மணுதாரருடன் கலந்துரையாடி கேள்வி விலையை நியாயமான பெறுமானம் வரை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இருப்பினும், இந்த பெறுகைகளிற்குரிய பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 4,068.08 மில்லியனாதுடன் மூன்று பொதிகளின் கிடைக்கப் பெற்ற குறைந்தபட்ட கேள்வி விலை பொறியியல் மதிப்பீட்டை விட 21 சதவீதம் முதல் 27 சதவீதம் வரையான வீச்சளவுகளால் அதிகமென அவதானிக்கப்பட்டது. | கொள்வது பொருத்தமென தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் NR1 மற்றும் NR5 பொதிகளிற்காக விலைகளை கலந்துரையாட அமைச்சின் பெறுகைகள் குழு முடிவு செய்தது. | |
| (உ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி விலை நிபந்தனைகளிற்கு முரணாக குறைந்தபட்ச பதிலளிப்பு செய்த மணுதாரரிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்த பொதியை வழங்க முடியாத வகையில் கேள்வி விலை ஆவணங்களில் 03 பகுதி 1.6 பிரிவின் கீழ் விஷேட நிபந்தனை ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது. அதனால குறைந்தபட்ச பதிலளிப்பு செய்த மணுதாரர் அல்லாத வேறொரு கேள்விதாரருக்கு குறித்த ஒப்பந்தத்தை கையளிக்க நேரிடுவதன் காரணமாக வழங்கப்பட்ட ஒப்பந்த பொதிகளிற்கு மாத்திரம் ரூபா 695.45 மில்லியன் மேலதிக கிரயமொன்றை மேற்கொள்ள நேரிட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் பலவற்றின் குறைந்தபட்ச மற்றும் பதிலளிப்பு செய்த மணுதாரர் ஆன போதம் ஒரு மணுதாரருக்கு வழங்க முடியுமாவது ஒரு ஒப்பந்தத்தை மாத்திரம் என கேள்வி விலை ஆவணங்களில் மதிப்பீடு மற்றும் தகைமை பிரமாணத்தின் கீழ் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக செயற்படுவதால் ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக குறித்த அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டியதென. |
| (ஊ) | ஒப்பந்ததாரர்கள் தங்கள் சொந்த செலவில் செயலாற்றுகை பிணைமுறிகளை வழங்க வேண்டிய போதும், ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் உபபிரிவு 4.2 இற்கு முரணாக ஒப்பந்தக்காரர்கள் உரிமை கோருவதற்கு முடியுமான வகையில் தனியான கட்டண உருப்படி ஒன்றை அளவுத் தாள்களில் உட்படுத்தியுள்ளதாக அவதானிக்கபட்டது. அதன் பிரகாரம் செயலாற்றுகை பிணைமுறிகளின் கிரயத்தை மீள்நிரப்ப ஊவா மாகாண ஒப்பந்தக்காரர்களிற்கு 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 85.64 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உருப்படியின் கீழ் எந்த இழப்பும் ஏற்படவில்லை. இந்த உருப்படி சேர்க்கப்படவில்லை எனில் ஒப்பந்ததாரர் அதை பொதுவான மேந்தலையின் கீழ் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பார். | ஒப்பந்த நிபந்தனைகளை மாற்றுவதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமான மற்றும் அரசாங்கத்திற்கு பாதகமான நிலைமைகள் ஒப்பந்தங்களில் சேர்க்கப்படக் கூடாதென மற்றும் அவ்வாறு சேர்ப்பதற்கு பொறுப்பான அலுவலர்களிற்கு அது தொடர்பாக தேவையான முறையான ஒழுக்காற்று |

| | | | |
|---|---|---|---|
| | | | நடவடிக்கைகளை எடுக்க வேண்டும |
| (எ) | ஒப்பந்த விஷேட நிபந்தனையின் உப பிரிவு 14.6 பிரகாரம், ஒப்பந்ததாரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இடைக்கால கொடுப்பனவு (பட்டியலின்) பத்திரத்தின் குறைந்தபட்ச பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 1.5 சதவீத்திலும் குறைவாக இருக்கக் கூடாது. எவ்வாறாயினும், மீளாய்வண்டின் போது தேவையான குறைந்தபட்ச எல்லையை விட குறைந்த பெறுமதியுடன் கூடிய கூட்டுப் பெறுமதி ரூபா 5,192.39 ஆன இடைக் கால கொடுப்பனவு பத்திரங்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்திய 326 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | ஒப்பந்த கம்பனிகளில் அவ்வப்போது ஏற்பட முடியுமான நிதி ரீதியான பிரச்சினை காரணமாக 1.5 சதவீதத்திலும் குறைந்த மாதாந்த பட்டியலான போதும் பரிந்துரைக்கும் சந்தர்ப்பத்தை மதியுரை கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மற்றும் அந்த எல்லைகளை மாற்றுவதற்கு தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஏ) | ஒப்பந்த நிபந்தனை 108.4 (2), (5) மற்றும் 120.7 (1) பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட முடிவில் அனைத்து ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் அளவை உபகரணங்களை ஒப்பந்ததாரரிற்கு திருப்பி வழங்கப்பட்ட போதும், ஆய்வுகூடம், தளபாடம் மற்றும் அளவை உபகரணங்களிற்காக ஒரு தடவையில் மேற்கொள்ளும் கொடுப்பனவாக முறையே ரூபா 518.99 மில்லியன் மற்றும் ரூபா 14.13 மில்லியன் 2022 திசெம்பர் 31 திகதியில் செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அசாதாரண ஒப்ந்த நிபந்தினை ஒப்பந்ததாரருக்கு உரிதற்ற நலன்களை வழங்க காரணமாக இருந்தது. | எதிர்வரும் ஒப்பந்தங்களில் இந்த உருப்படியை அகற்றுவதற்காக காணப்படும் சாத்திப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் செயல்முறையின் முக்கிய நோக்கமொன்றாவது, குறைந்த கிரயத்தின் கீழ் வேலையைச் செய்து கொள்வதாகும். அதன் பிரகாரம் நிறுவனத்திற்கு பாதகமான நிபந்தனைகளைச் உள்ளடக்குவது தொடர்பாக முகாமைத்துவத்தினால் குறித்த அலுவலர்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென. |
| (ஐ) | ஒப்பந்தத்தின் பொது நிபந்தனை உப பிரிவு 15.3 பிரகாரம், ஒப்பந்த இரத்துச் செய்வது தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்ட பின்னர் ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய வேலைகள், பொருட்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவு தொடர்பாக பொறியியலாளரினால் கூடிய விரைவில் முடிவு செய்ய வேண்டிய போதும், ஊவா மாகாணத்தில் இரத்து செய்யப்பட்ட 03 ஒப்பந்தங்கள் இரத்துச் செய்வது தொடர்பாக அறிவிப்பு | பொதுமக்களின் முறைப்பாடுகளைக் குறைக்கவும், ஏற்பட முடியுமான மேலதிக செலவுகளைத் தவிர்க்கவும் ஒப்பந்த முடிவுறுத்தும் (Value at termination) பெறுமதியை முடிவுசெய்யும் செயன்முறைக்கு | அரசுக்கு நட்டம் ஏற்படும் வகையில் தமது கடமைப் பணிகளை தாமதப்படுத்தும் அதிகாரிகள் தொடர்பில் உரிய விசாரணை நடாத்தி இழப்பீட்டை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையாகும் நாளிலிருந்து ஒப்பந்த முடிவுறுத்தல் பெறுமதியை (Value at termination) கணக்கிடுவதற்கு 267 முதல் 413 நாட்கள் வரையான கலம் தாமதமாக்கியிருந்தது. இந்த ஒப்பந்தத்தை மீண்டும் வழங்குவதற்காக மேற்கொண்டு பெறுகைகள் நடவடிக்கைக்காக தயாரித்திருந்த பொறியியல் மதிப்பீடுகளில் சரியான தன்மையை போன்றே ரூபா 560.14 மில்லியனான செலுத்தப்பட வேண்டிய வேலை ஆரம்பிப்பு முற்பணத்தை அறவிட தாமதிக்கவும், ரூபா 690.74 மில்லியனான செயலாற்றுகை பிணைமுறியை பணமாக்க தவரியதும் இந்த காரணங்கள் நேரடியாக தாக்கம் செலுத்தியிருந்தது | இடையில் எஞ்சிய வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்தல் மற்றம் மீண்டும் கேள்வி விலைகளை கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிணைமுறி பணத்தை அறவிடல் தாமதமானது் உயர் நீதிமன்றத்தில் ஒப்பந்ததாரர் பெற்ற தடை உத்தரவு காரணமாக ஆகும். | |
| (ஒ) | ஒப்பந்த முடிவுறுத்தல் பெறுமதியை கணப்பிடல் தாமதித்ததும் அக கணப்பீட்டின் மதியுரை பொறியியலாளர் மற்றும் ஒப்பந்ததாரர் சேர்ந்து மேற்கொண்ட வேலைதள பரீட்சிப்பு தொடர்பான கடித ஆவணங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்காமை காரணமாக ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் போது வேலைத்தளத்தினுள் எஞ்சியிருந்த மூலப்பொருட்கள் (Materials at Site) தொடர்பான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததால் கணிப்பிட்டிருந்த வேலை முடிவுறுத்தும் பெறுமதியின் சரியான தன்மையையும் உறுதியாகவில்லை. | மதியுரை பொறியியலாளருடன் சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய வேலைதள பரீட்சிப்பு அறிக்கையை ஒப்பந்ததாரரினால் சமர்ப்பித்திருக்காததுடன் பொறியியலாளர் சமுகமளித்து பரீட்சிக்கும் போது எவ்வித எஞ்சிய மூலப்பொருட்களும் (Materials at Site) ஒப்பந்தாரரின் வேலைத் தளத்தில் இருக்கவில்லை. | ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் சந்தர்ப்பத்தில் வேலைத் தளத்தில் எஞ்சியுள்ள மூலப்பொருட்கள் தொடர்பான மதிப்பீடொன்றை எடுக்க வேண்டும். |
| (ஓ) | வீதிகள் மறுசீரமைப்புப் பணிகளில் பலவீனமான முன்னேற்றம் காரணமாக பயன்படுத்தப்படாத கடன்களுக்கான அர்ப்பணிப்புக் கட்டணமாக (Commitment charges) ஐ.அ.டொலர் 0.46 மில்லியனிற்கு சமமான ரூபா 90.50 மில்லியன் சிக்கனமற்ற விதத்தில் 2022 திசெம்பர் 31 திகதி கடன் வழங்கும் முகவர் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | கடப்பாட்டுக் கட்டணத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் பணத்தை உரிய காலத்திற்குள் ஆக்கபூர்வமாக பயன்படுத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகுமென. |
| (ஔ) | ஊவா மாகாணத்தில் இரத்துச் செய்யப்பட்ட 03 ஒப்பந்தப் பொதிகளை மீண்டும் 09 பொதிகளாகப் பிரிக்கப்பட்டு விலைகள் கோரப்பட்ட போது அவற்றில் 07 பொதிகளின் ஒப்பந்தங்கள் மீளாய்வாண்டு இறுதியளவில் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ் ஒப்பந்த பெறுமதி, அடிப்படை 03 பொதிகளின் | சந்தையில நிலவும் விலைகள் மற்றும் கேள்வி மனுவை பாதிக்கும் பிற காரணிகள் ஆரம்ப கேள்வி மனு சமர்ப்பிக்கும் திகதி முதல் மீண்டும் | நடைமுறை சாத்தியமாக திட்ட இலக்குகளை ஸ்தாபிப்ப வேண்டியதுடன் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 7,266.19 பெறுமானம ரூபா 1,040.64 மில்லியனைத் தாண்டி இருந்தது. எஞ்சிய 02 தொகுப்புகளை வழங்கிய பின்னர் இந்த மேலதிக கிரயம் தொடர்ந்தும் அதிகரிக்கும். இக் கிரயம் அதிகரிக்க பலவீனமாக கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கருத்திட்டப் பணிகளின் மெதுவான முன்னேற்றம் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. | சமர்ப்பிக்கும் காலம் வரையான வீச்சளவினுள் பல ஏற்ற இறக்கங்களிற்கு உள்ளானது. | மேலதிக கிரயத்தைக் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகுமென. |

### 3.4.3 மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் - பகுதி 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கருத்திட்டத்தின் ஒப்பந்ததாரரான சீனாவின் உலோகவியல் பொது கூட்டுத்தாபனத்தினால் (MCC) வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் பொதி 07 மற்றும் பொதி 04 இன் நிர்மானத்தின் கீழ் மேற்கொண்ட செலவுகளிற்காக கொடுப்பனவு செய்ய இயலாமை காரணமாக, பெறுகைகள் நடைமுறையை பின்பற்றாது 2015 ஜூலை 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் 15/1021/602/040 இன் கீழ் ரூபா 158,386 மில்லியன் பெறுமானத்திற்கு மத்திய அதிவேக நெடுஞ்சாலை I பிரிவின் ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. | பெறுகைகள் கோவையின் ஏற்பாடுகளிற்கு இணங்க ஒப்பந்தம் வழங்கப்படாவிட்டாலும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு அமைவாக ஒப்பந்ததாரர் தேர்வு முதல் வழங்கல் வரையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. . | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம் பொருளாதாரத் தன்மை, வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்படுகிறதென. |
| (ஆ) | கடவத்த தொடக்கம் கொஸ்சின்ன வரையான பொதி - I இன் ஒப்பந்த உடன்படிக்கை 2016 ஜூன் 20 திகதியும், கொஸ்சின்ன தொடக்கம மீறிகம் வரையான பொதி - II இன் ஒப்பந்த உடன்படிக்கை 2015 ஆகஸ்ட் 04 திகதியும், கைச்சாத்திட்டிருந்த போதும் சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது 2020 செப்டம்பர் 22 வரை தாமதித்திருந்ததால் வேலைகளை ஆரம்பிக்க 2020 செப்டம்பர் 15 திகதி வரை தாமதமாகி இருந்தது. நிலவும் பொருளாதார நெருக்கடியின் முன்னே சீனா ஏற்றுமதி இறக்குமதி வங்கி கடன் வழங்களை | ஏற்றுக் கொள்கிறேன். | எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்து கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் |

| | | | |
|---|---|---|---|
| | தாமதமாக்கிய காரணத்தால் 2022 திசெம்பர் 31 திகதி பொதி I மற்றும் II இன் உள்ளவாறான முன்னேற்றம் முறையே 39 சதவீதம் மற்றும் 34 சதவீதமான கீழ் மட்டத்தில் நிலவின. | | |
| (இ) | தற்போது முதல் பொதி மற்றும் இரண்டாவது பொதிக்கான இடைக்கால கொடுப்பனவுகள் மூலம் ரூபா 13,266.87 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதுடன் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்காக ஒப்பந்ததாரரால் கொடுப்பனவிற்காக சமர்ப்பித்த போதும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் செலுத்தப்படாத இடைக்கால கொடுப்பனவுகளின் பெறுமதி ரூபா 40,347.75 மில்லியனாகும். இடைக்கால கொடுப்பனவிற்காக ஒப்பந்ததாரரிற்கு பணம் செலுத்தாததால் பொது ஒப்பந்த நிபந்தனைகள் 16.1 இன் பிரகாரம் 2022 ஜுன் 22 திகதி ஒப்பந்ததாரரினால் ரூபா 666.32 மில்லியன் நிதிக் கட்டணமொன்றும் கோரப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | மேலதிக கொடுப்பனவுகளை குறைத்துக் கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் கருத்திட்டம் 5163 அடிப்படை நிலத் துண்டுகள் மற்றும் 1978 மேலதிக நிலத் துண்டுகளும் 5136 தனியார் நிலத்துண்டுகள் மற்றும் 1220 அரசு நிலத்துண்டுகளும் கையகப்படுத்தி இருந்ததுடன் வளைவுகளை குறைக்க பல இடங்களில் சாலை பாதையை மாற்றிய காரணத்தால் கையகப்படுத்தவுள்ள நிலத் துண்டுகளின் அளவு 50 ஆகும். சட்டத்தின் 44 வது பிரிவின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது அவற்றில் 625 காணிகளை மட்டுமே சுவீகரித்திருந்தது. நிலம் சவீகரித்ததலுக்காக கருத்திட்டம் 2022 திசெம்பர் 31 திகதியன்று இழப்பீடாக ரூபா 9,402.14 மில்லியனை மற்றும் தாமத வட்டியாக ரூபா 1,016.54 மில்லியனை செலுத்தியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிலம் சுவீகரித்தலுக்கான இழப்பீடாக ரூபா 88.23 மில்லியன் மற்றும் தாமத வட்டியாக ரூபா 331.87 மில்லியன் செலுத்த நிலுவையாக இருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | சுவீகரிக்கப்படும் காணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு முறையாக கையளிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் ஒப்பந்ததாரரினால் செயலாற்றுகை பிணைமுறியை தனது சொந்த கிரயத்தில் பெறவேண்டிய போதும், | இந்த உருப்படி சேர்க்கப்படவில்லை என்றால் ஒப்பந்ததாரர் அதனை மேந்தலையின் கீழ் பெற்றுக் கொள்ள | ஒப்பந்த நிபந்தனைகளை மாற்றுவதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு முரணாக அதற்காக வேலை அளவுப் பத்திரங்களில் தனியான உருப்படியொன்றை உள்ளடக்கியிருந்ததுடன் அந்த உருப்படியின் கீழ் கூட்டுத் தொகை ரூபா 805.43 மில்லியன் கருத்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.. | நடவடிக்கை எடுப்பார். | ஒப்பந்தக்காரர்களுக்கு சாதகமான மற்றும் அரசாங்கத்திற்கு பாதகமான நிலைமைகள் ஒப்பந்தங்களில் சேர்க்கப்படக் கூடாதென மற்றும் அவ்வாறு சேர்ப்பதற்கு பொறுப்பான அலுவலர்களிற்கு அது தொடர்பாக தேவையான முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும |
| (எ) | பல்லேவெல நகருக்கு அருகில் உள்ள கல்லெலிய - மதகம்பிட்டிய வீதி (B183) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மேல் மேம்பாலமாகத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதற்கு தேவையான காணி சுவீகரிப்பும் நிறைவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மேம்பாலம் நிர்மாணிப்பது தொடர்பில் எழுந்த சமூக எதிர்ப்பு காரணமாக சாலையின் அடிப்படைத் திட்டங்களைத் திருத்தியமைத்து நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக ரூபா 2,590 மில்லியன் மேலதிக செலவு செய்ய வேண்டியிருந்தது. மேலும் அது தொடர்பான வேலைத் தளங்கள் ஒப்படைக்காதன் காரணமாக ஒப்பந்ததாரர் ரூபா 411.92 மில்லியன் மேலதிக கொடுப்பனவொன்றையும் மற்றும் 177 நாட்களுக்கு கால (EOT) நீடிக்குமாறும் கோரியிருந்தார். | ஏற்றுக் கொள்கிறேன். | சமூக விழிப்புணர்வு மூலம் அடிப்படைத் திட்டங்களில் மாற்றங்களைக் குறைப்பதன் மூலம் மேலதிக மற்றும் பொருளாதாரச் செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியால் அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டதன் காரணமாக ஒப்பந்ததாரரின் சொத்துக்கள் செயலற்கு இருந்தன. சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பணியாளர்களை ஒப்பந்த காலம் முடிவதற்கு முன்னர் மீண்டும் சீனாவுக்கு அனுப்ப குறித்த ஒப்பந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | ஏற்றுக் கொள்கிறேன். | பொருளாதாரம் சாராத செலவுகளைக் குறைக்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந்த நிலைமை காரணமாக 2022 ஜுன் முதல் 2023 மே வரை ஊழியர்களை சீனாவுக்கு அனுப்புவதற்கான விமான பிரயான அனுமதிப்பத்திர கட்டணம் உள்ளிட்ட பிற செலவுகளுக்காக ரூபா 40.66 மில்லியன் மற்றும் ரூபா 4.96 மில்லியன் யென் (CNY) திட்டத்திலிருந்து கோரிப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டதன் காரணமாக வீதியின் சில இடங்களில் நீர் நிரம்பிய பாதுகாப்பற்ற குழிகள் ஏற்பட்டமை பாரிய சூழல் பிரச்சினையாவதுடன் பொதி I இல் வீதிப் பாதுகாப்பிற்காக (Traffic Safety and Control) மீளாய்வாண்டில் ரூபா 9.82 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. கான்கிரீட் நிர்மாணங்களின் வெளிப்படும் இரும்பு துருப்பிடிப்பு காரணமாக அவற்றின் நிலைத்திருக்கும் தன்மை கேள்விக்குறியாக இருந்ததுடன் இந்த பிரச்சனைகளை தடுக்க பயனுள்ள எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை. | நிர்மாணப் பணிகள் இடை நடுவே நிறுத்திய இடங்களை தேவையான பாதுகாப்பு இழைகள் மற்றும் பலகைகள் கொண்டு மூடிவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகள் இடை நடுவே நிறுத்திய போது வேலைத் தளத்திற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளதாக உறுதி செய்து கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4.4 கண்டி சுறங்கப் பாதை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி நகரின் காணப்படும் கடும் வாகன போக்குவரத்திற்கு தீர்வாக தன்னேகும்புர மற்றும் சுதுஹும்பொல இடையே கி.மீ. 5.56 தூரமான 04 சுரங்கப் பாதைகள், 03 பாலங்கள் மற்றும் 04 இடைமாற்றுக்களை கொண்ட 02 வழிச் சாலையை நிர்மாணிப்பதற்காக EDCF – கொரியா நிதியளிப்பு முகவர் நிறுவனத்தின் நிதியுதவியின் கீழ் ஐ.அ.டொ. 252.3 மில்லியன் அதாவது இலங்கை ரூபா 50,461 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் 2021 செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கக திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் சூழல் பாதிப்பை மதிப்பிடுவதற்காக 2021 மார்ச் 25 அன்று வீதி அபிவிருத்தி | நாட்டில் நிலவிய சீரற்ற நிலைமை காரணமாக களப்பணிகளில் தாமதம் ஏற்பட்டமை, எரிபொருள் பற்றாக்குறையினால் ஆழ்துளை ஆய்வுப் பணிகளிற்கு (bore exploration process) தடையேற்பட்டமை காரணமாக 03 சந்தர்ப்பங்களில் கால எல்லை (EOT) நீடிக்கப்பட்டிருந்தது. | தேசிய ரீதியில் தேவையான கருத்திட்டம் என்பதால் கருத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகாரசபை மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு இருந்ததுடன் அதற்கான ஒப்பந்த காலம் 03 தடவைகளில் (EOT) நீடிக்கப்பட்டது. இதன் பிரகாரம் 2022 டிசம்பர் 31 திகதியன்று சூழல் பாதிப்பை மதிப்பீட்டுப் பணிகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு இருந்ததுடன் ரூபா 43 மில்லியன் அதாவது ஏற்பாட்டுடன் ஒப்பிடும் போது 86 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 2 சதவீதம் மத்திரமே. | | |

**3.4.5 காலி வீதிக்கு சமாந்தரமாக கடல்வழிப் பாதையை (Marine Drive) பாணதுறை வரை நீடித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கொழும்பு - காலி வீதியின் போக்குவரத்தை குறைப்பதற்காக மாற்றுப் பாதையாக காலி வீதிக்கு சமாந்தரமான (Marine Drive) பாணந்துறை வரை நீடிக்கும் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 5,346 மில்லியனானதுடன் மீளாய்வாண்டிற்காக கூட்டுத் தொகை ரூபா 550.47 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. பல கட்டக் கருத்திட்டத்தின் IV கட்டத்திற்கு உரிய தெஹிவளை கால்வாயின் மேலான பாலத்தின் பணியின் பௌதீக முன்னேற்றம் 2022 திசெம்பர் 31 திகதியில் 60 சதவீதமானதுடன் செலவு ரூபா 351.05 மில்லியன் ஆனதில் கருத்திட்டம் நிதி முன்னேற்றம் 64 சதவீதமாகும். | கடல்வழிப் பாதை கருத்திட்ட விரிவாக்கம் (Extension) நிறைவு செய்ய மாத்திரம் எஞ்சியுள்ளது. எனினும் நிதி ஏற்பாடு கிடைக்காத காரணத்தால் ஒப்பந்ததாரரினால் 2022 ஜூன் மாதம் இக் கருத்திட்டத்தை நிறுத்தியுள்ளார். | கருத்திட்டத்தை நிறுத்தினார். கருத்திட்ட பணிகளை குறித்த காலத்தில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4.6 போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ கருத்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இத்திட்டத்தின் கீழ் பேலியகொட- புத்தளம் வீதியின் ஜா-எல முதல் சிலாபம் நகரின் இறுதி வரை சுமார் 58 கிலோமீற்றர்கள் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்ததுடன் கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ஐ.அ.டொ 125 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியனாகும். எவ்வாறாயினும், கருத்திட்டத்தின் ஆரம்ப விடய பரப்பை மாற்றி ஆரம்ப கடன் ஏற்பாட்டை ஐ.அ.டொ 9 மில்லியன் அல்லது ரூபா 1,305 மில்லியனுக்கு சமமானதாக திருத்தப்பட்டிருந்தது. இத்திட்டத்தை 2016 ஜூன் 30 இல் ஆரம்பித்து 2026 ஜூன் 30 இற்கு முடிக்க திட்டமிட்டிருந்த போதும் கடன் தொகை மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக எதர்பார்த்த நோக்கங்களை அடைய முடியவில்லை. மேலும், கருத்திட்ட விடயப் பரப்பு மாகாண பாதைகளை மேம்படுத்துதல் என மாற்றப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் முன்னுரிமை மாற்றமடைந்ததன் காரணமாக தேசிய நெடுஞ்சாலைகளை கைவிட்டு மாகாண சபை பாதைகளை மேம்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதி முன்னேற்றம் எதிர்பார்த்த அளவை அடைய முடியவில்லை. | கருத்திட்ட நோக்கங்கள் மற்றும் விடயப் பரப்பு கருத்திட்டத்தை திட்டமிடும் போது சரியாக தீர்மானிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திததியளவில் கடன் வசதி வழங்கப்பட்டு 5 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் கடந்திருந்த போதும் அத் திகதியில் ஐ.அ.டொ 2.3 மில்லியன் அல்லது 26 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டு இருந்தது. கருத்திட்ட விடயப் பரப்பை கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது மூன்று முறை மறுசீரமைத்தல் மற்றும் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் தாமதம், கருத்திட்டப் பணிகளில் தாமதத்திற்கு முக்கிய பங்களிப்பு செய்திருந்தது. 2022 திசெம்பர் 31 திகதிக்கு கருத்திட்டத்தின் முக்கிய செயல்பாடுகளின் இலக்கு மயப்பட்ட முன்னேற்றம் 100 சதவீதமாக இருந்த போதிலும், அடையப்பட்ட முன்னேற்றம் 77 சதவீதமாக மாத்திரமாக இருந்தது. | 2022 திசெம்பர் 31 திகதியளவில் கருத்திட்டத்தை இரண்டு முறை மறுசீரமைத்ததால் தாமதமானது. கருத்திட்ட நிறைவு திகதி 2023 செப்டம்பர் 30 வரை நீடிக்கப்பட்டதால் மேல்குறிப்பிட்ட கடன் வசதியை முழுமையாகப் பயன்படுத்த முடியும். | கருத்திட்ட நோக்கங்கள் மற்றும் விடயப் பரப்பு கருத்திட்டத்தை திட்டமிடும் போது சரியாக தீர்மானிக்கப்பட வேண்டும். |

### 3.4.7 அதிவேக நெடுஞ்சாலை இணைப்புக் கருத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இக்கருத்திட்டத்தின் திருத்தப்பட்ட விடயப் பரபின் பிரகாரம், கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டத்தில் 06 தேசிய வீதிகள் கி.மீ. 45.77 இனை புனரமைப்புக்காக 05 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வீதி நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது. ஒப்பந்தப் பொதி - 3 திட்டமிட்டவாறு முடிக்கப்பட்ட போதும், ஒப்பந்தத் தொகுப்பு (CP) 1, 2 மற்றும் 4 ஆகியவற்றின் நிரமாணம் முறையே 248 நாட்கள், 534 நாட்கள் மற்றும் 689 நாட்கள் தாமதத்துடன் முடிவிக்கப்பட்டிருந்தன. CP-2, CP-3 மற்றும் CP-4 பொதிகளின் முன்னேற்றம் நூறு சதவீதம் எனக் குறிப்பிடப்பட்ட போதும், அதன் எஞ்சிய பணிகள் CP-5 என்னும் புதிய பொதியின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. CP-5 ஒப்பந்தப் பொதியின் நிரமாணப் பணிகள் 2021 நவம்பர் 30 இல் முடிவுறுத்த வேண்டியதாக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் 86 சதவீத பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அடையப்பட்டிருந்தது. எனவே கருத்திட்ட எஞ்சிய நடவடிக்கைகளுக்கு செலவாகும் தொகையான ரூபா 402 மில்லியன் எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு செலவிட வேண்டியிருக்குமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, பொதி - 5 இன் எஞ்சிய பணிகளை ஒருங்கிணைந்த பாதை முதலீட்டுத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதும் 2023 மே அளவிலும் அந்த வேலைத் திட்டத்துடன் ஒப்பந்தத்திற்கு உட்பட்டிருக்கவில்லை. | CP–1 மற்றும் CP–4 பொதிகள் ஆரம் வேலை விடயப் பரப்பு பிரகாரம் பூர்த்தி செய்துள்ளதுடன் CP–2 மற்றும் CP–3 பொதிகள் திருத்தப்பட்ட விடயப் பரப்பின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. CP-2 பொதியின் கீழ் இருந்த B-084 பாதையின் பல பிரிவுகளின் எஞ்சிய பணிகள் CP-5 பொதியிற்கு சேர்க்கப்பட்டன. இருப்பினும், CP-3 மற்றும் CP-4 இன் செயல்பாடுகள் எதுவும் CP-5 இற்கு சேர்க்கப்படவில்லை. எஞ்சிய பணிகள் Iroad கருத்திட்டத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும், IMF கடன் மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளதால் எஞ்சிய பணிகளை செயல்படுத்துவது தாமதமாகியுள்ளது. | மெலதிக கிரயம் குறையும் வகையில் ஒப்பந்தப் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும். |

### 3.4.8 புதிய களனி பாலம் முதல் அதுருகிரிய வரை தூண்கள் மீது நிர்மாணிக்கும் கருத்திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பு நகரப் பகுதியின் நிதி மற்றும் நிர்வாகத் தலைநகரங்களில் காணப்படும் அதிக வாகன நெரிசலை குறைக்கும் நோக்கில் இக் கருத்திட்டத்தை நாட்டின் முன்னுரிமை கருத்திட்டங்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதனை 2025 ஆம் ஆண்டில் முடிவுறுத்தி 15 ஆண்டுகளுக்கு முதலீட்டாளரால் நடத்தப்பட இருந்தது. கருத்திட்டத்தை திட்டமிடல் - உருவாக்கம் - நிதி - இயக்கம் - பராமரிப்பு மற்றும் ஒப்படைப்பு (DBFOMT) அடிப்படையில் பொது தனியார் கூட்டாண்மையாக (PPP) செயல்படுத்தப்பட இருந்தது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் மொத்தமாக ரூபா 193,000 மில்லியன் ஆவதுடன் பிரதான பாதையின் நீளம் கி.மீ. 16.4 ஆகும். 2022 திசெம்பர் 31 அளவில் கருத்திட்டத்திற்கான மேற்கொண்ட மொத்தச் கிரயம் ரூபா 1,181.64 மில்லியனாக இருந்த போதிலும், 2023 சனவரி 31 திகதி முதல் நடைமுறையாகும் வகையில் கருத்திட்டச் செயற்பாடுகளை முடிவுறுத்த கருத்திட்ட செயற்பாட்டுக் குழு அமைச்சரவையின் அனுமதியின்றி தீர்மானித்திருந்தது. | 2023 சனவரி 12 திகதி அன்று நடைபெற்ற கருத்திட்ட செயற் குழுவினால் (Project Steering Committee) கருத்திட்ட நடவடிக்கைகளை முடிவிட தீர்மானிக்க அடிப்படையாகக் கொண்டது அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பாரிய அளவிலான அபிவிருத்தி திட்டங்களை மறு-திட்டமிடுவதற்கும் துரிதப்படுத்துவதற்கும் அதிகாரம் கொண்ட அதிகாரிகள் குழுவின் மூலம் (RAMP) வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் ஆகும். | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள முடியுமான வகையில் திட்டங்களை குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும். |

### 3.4.9 துறைமுக நுழைவு மேன்பாதை கருத்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கருத்திட்டத்தை செயற்படுத்தும் திட்டத்தை 04 முறைகள் திருத்தப்பட்டு இருந்ததுடன் எதிர்பார்த்த முழுத் திட்டத்தையும் பூர்த்தி செய்வத 2025 ஆண்டு முதல் 2026 ஆண்டு வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான கருத்திட்ட செயல் | கருத்திட்ட காலத்தில் திட்டமிட்ட செயல்பாடுகளை முடிவுறுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | கருத்திட்ட திட்டத்தின் பிரகாரம் முடிவுறுத்துவதன் மூலம் மேலதிக கிரயங்களை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 40,228 மில்லியனான 13 செயற்பாடுகளின் ரூபா 40,171 மில்லியனான 09 பிரதான செயற்பாடுகளை ஆரம்பிப்பது தாமதமாகியிருந்ததுடன் அதற்காக் 03 மாதங்களில் இருந்து 64 மாதங்கள் வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கருத்திட்ட குறித்த செயற்பாடுகள் திருத்தப்பட்ட இலக்குத் திகதிகளில் செயற்பாடுகளை நிறைவு செய்வது கேள்விக்குரியதாகவே அதவானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கருத்திட்டத்தை 2019 செப்டம்பர் 27 திகதி ஆரம்பித்து 2022 செப்டம்பர் 25 திகதி முடிக்க திட்டமிடப்பட்டிருந்த போதும், 2022 திசெம்பர் 31 திகதியன்று 1192 நாட்கள் கடந்த பின்னர் மொத்த சிவில் பணி முன்னேற்றம் 54 சதவீதமாக இருந்தது. நிர்மாணப் பணிகளை முடிப்பதற்கு 259 நாட்களுக்கு கால நீடப்பு வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் வேலைகளின் நிறைவு திகதி 2023 ஜூன் 11 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரின் செயற்திறமையின்மை இதற்குக் காரணமாக இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 திகதி வரை கருத்திட்டம் வழங்கிய 105 நாட்கள் கால நீடிப்பு தொடர்பாக ஒப்பந்ததாரருக்கு ரூபா 147.66 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | துறைமுக அதிகாரசபையின் பிரதான களஞ்சியசாலை மற்றும் தொழிற்சாலை பிரதேசம் வரையான பகுதியை கருத்திட்டத்திற்காக பெற்றுக் கொள்வதன் தாமதம், இத்தாமதத்திற்கு பிரதான காரணமானது. | கருத்திட்டத்தை திட்டம் பிரகாரம் பூர்த்தி செய்வதன் மூலம் மேலதிக கிரயத்தை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்ட காரணமாக துறைமுக நுழைபு மேன்பாதையின் மற்றும் கடல்சார் வசதி மையம் (MFC) ஆகியவற்றின் நிர்மாணக் கிரயம் அதிகரித்ததன் மீது இந்தக் கடனின் கீழ் ஆரம்பமாக ஐ.அ.டொ. 24.7 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த இலத்திரனியல் கட்டண அறவீட்டு முறையை (ETC) செயல்படுத்துவதனை இரத்து செய்ய கருத்திட்டத்தினால் 2023 பெப்ரவரி 02 திகதியன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒப்புதலைக் கோரியிருந்தது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 திகதிக்கு இதன் | ETC தொகுதியை செயல்படுத்த முடிவெடுக்கப்படும் போது எதிர்காலத்தில் விவரக்குறிப்புகள் மற்றும் திட்டங்கள் பயன்படுத்த முடியும். | திட்டமிட்ட ஒப்பந்த பணிகளை விளைத்திறனாக மேற்கொண்டு கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதியுரை சேவைகளுக்காக ரூபா 161.69 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் ETC தொகுதியை செயல்படுத்துவதனை இரத்து செய்ததன் மீது அதற்காக செய்யப்பட்ட செலவு விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதி துறைமுக நுழைவு மேன்பாதை நிர்மாணப் பணிகளிற்கான ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 54 சதவீதமாக இருந்த போதும் நிதி முன்னேற்றம் ரூபா 23,430.34 மில்லியனாக இருந்ததுடன் இது ரூபா 28,002 மில்லியனான ஒப்பந்த கிரய மதிப்பீட்டில் 84 சதவீதமான உயர் பெறுமானமானது. செலாவணி பரிவர்த்தனை விகித இயக்கங்கள் மற்றும் தற்போதைய உயர் பணவீக்கம், கருத்திட்டத்தின் மெதுவான முன்னேற்றத்திற்கு முக்கியமாக தாக்கம் செலுத்தியிருந்தன. | இலங்கை துறைமுக அதிகார சபையினால் வீதிப் பகுதிகளின் உரிமையை வழங்குவதில் தாமதம் காரணமாக கருத்திட்டத்தை குறித்த காலப்பகுதியில் நிறைவு செய்ய முடியவில்லை. | கருத்திட்ட பணிகளை திட்டமிட்ட பிரகாரம் குறித்த காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

### 3.4.10 உள்ளக ரீதியாக இணைக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கிராமப்புற பாதைகளின் மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக 2021 நவம்பர் 03 திகதி ஐ.அ.டொ 500 மில்லியன் கடன் தொகையின் கீழ் இலங்கை அரசாங்கம் உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டதுடன் ரூபா 13,291.39 மில்லியன் வரியற்ற ஒப்பந்த பெறுமதிக்கு 09 ஒப்பந்ததாரர்களுக்கு 16 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இத்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கு ரூபா 2,303.30 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. கருத்திட்டத்தின் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் 04 பொதிகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் கி.மீ. | நாட்டில் நிலவிய பொருளாதார நிலையற்ற தன்மையின் மீது ஒப்பந்ததாரர்களுக்கு நிர்மாணப் பணிகளிற்குத் தேவையான எரிபொருள் மற்றும் வெடிபொருட்களைப் (Blasting Material) பெறுவதற்கு மிகவும் சிரமமாக இருந்தது. மேற்குறிப்பிட்ட காரணங்களால் தற்போது கால நீட்டிப்பு (Time Extention) வழங்க செயலாளரின் | திருப்திகரமான செயல்திறன் மட்டத்தை அடைந்து கொள்ள செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 76.62 கிராமப்புற 22 பாதைகளை 49 - 98 சதவீத வீச்சில் முடிக்க எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2022 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 601.10 மில்லியன் செலவில் கி.மீ. 7.1 அதாவது மொத்த நீளத்தில் 9 சதவீதம் மாத்திரம் வேலைகள் முடிக்கப்பட்டிருந்தன. | அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கருத்திட்டத்தின் பெறுகைகள் திட்டம் பிரகாரம், மீளாய்வாய்வாண்டில் மாத்தளை மாவட்டத்தைச் சேர்ந்த கி.மீ. 88.25 ஆன 23 கிராமப்புற பாதைகள், கி.மீ. 81.58 ஆன அநுராதபுரம் மாவட்டத்தில் 24 கிராமப்புற வீதிகளும் குருநாகல் மாவட்டத்தில் கி.மீ. 112 ஆன 16 கிராமப்புற பாதைகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டு இறுதிக்குள் 10 பொதிகளின் கீழ் 54 கிராமப்புற பாதைகள் கி.மீ. 251.67 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மாத்தளை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் வேலைகளை பூர்த்தி செய்ய ரூபா 876.69 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், பௌதீக முன்னேற்றம் 1 - 21 சதவீதத்திற்கிடையிலான குறைந்த பெறுமானமானது. | ஒப்பந்தப் பொதிகளின் பணிகளை விரைவுபடுத்த தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள், நல்ல நிதி முகாமைத்துவம் மூலஉபாயங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன. | திருப்திகரமான செயலாற்றுகையை அடைய நடடிவ்கை எடுக்க வேண்டும். |

### 3.5 உள்நாட்டு நிதியங்கள் மூலம் செயற்படுத்திய கருத்திட்டம்

#### 3.5.1 மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் - கட்டம் 02

மீரிகம முதல் குருநாகல் வரையிலான மத்திய அதிவேகப் பாதையின் இரண்டாவது பகுதி நான்கு பொதிகளின் கீழ் உள்ளூார் ஒப்பந்த கூட்டு முயற்சிகள்/ கூட்டமைப்புகளுக்கு (Consortiums) நான்கு தொகுப்புகளின் கீழ் வழங்கப்பட்டிருந்தன. 2022 சனவரி 15 திகதி போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக பாதை திறக்கப்பட்ட போதிலும் சிவில் பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பொது திறைசேரியின் ஊடாக கடனைப் பெற்றுக்கொள்ளும் போது அதன் போது சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் குறைக்கும் நிபந்தனை பாதிக்கப்படும் என்பதால் நேரடியாக கடனைப் | அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் உள்ளூார் ஒப்பந்ததாரர்களை முன்னெடுக்கும் நோக்கில் உள்ளூர் | அரசின் நிதிக் கொள்கைகளுக்கு ஏற்ப கருத்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் இக் கருத்திட்டத்திற்காக ரூபா 124,221.35 மில்லியன் கடன் தொகையை பல்வேறு சந்தர்ப்பங்களில் பல உள்ளூர் வங்கிகளிடமிருந்து பெற்றிருந்தது. எனினும் குறித்த கடனை செலுத்த அதிகார சபையினால் மீண்டும் திறைசேரியில் இருந்து நிதி ஒதுக்கீடுகளை பெறுவதால் அந்த செயற்பாட்டினால் வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் குறைக்கும் நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களின் நேரடி பங்களிப்பில் இலங்கையினுள் மேற்கொள்ளும் முதலாவது அதிவேக பாதை கருத்திட்டமாக இந்த அதிவேக பாதை கருத்திட்டதிதை உள்ளூர் வங்கிக் கடன்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | இந்த ஒப்பந்தப் பணிகளுக்கு விரிவான பொறியியல் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதால், கேள்வி விலைகளை சமர்பிக்கும் உள்ளூர் ஒப்பந்ததாரர்களக்கு தெற்கு அதிவேகப் பாதையை நிர்மாணிப்பது தொடர்பான முன் அனுபவம் உள்ளமை, வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஆரம்ப திட்டங்களை அதன் போது தயாரித்திருந்ததால் பெறுகை வழிகாட்டிக் கோவையின் மேலதிக இணைப்பு 23 இன் நிபந்தனை 1.3 க்கு முரணாக முந்தைய போட்டி விலைகளை கோராமல் (Competitive bidding) முன் இணக்கஞ் செய்யப்படாத விலையின் அடிப்படையில் (Unsolicited proposal) ஒப்பந்ததாரர்களைத் தேர்வு செய்ததால், அரசாங்கத்திற்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த போட்டிப் பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டிருந்தன. அவ்வாறே கருத்திட்ட மதியுரை சேவைகளை வழங்குவதற்காக முன் தகைமை கொண்ட பல மதியுரை கம்பனிகளால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு தொழிற்சங்கத்திற்கு Consortiums) முந்தைய போட்டி விலை கோரல் இல்லாமல் விலை இணக்கப்பாட்டின் மீது மத்திரம் கூட்டுத் தொகை ரூபா 2,243.40 மில்லியன் மற்றும் | கருத்திட்டத்தின் நான்கு (04) பொதிகளுக்கு பங்குதாரர் ஒப்பந்த நான்கு (04) கம்பனிகளுக்கும் கேள்வி வலைகளை சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்ட போதும் ஒரு பொதிக்காக ஒரு பங்குதாரர் கம்பனி மாத்திரம் கேள்வி விலைகளை சமர்ப்பித்ததனால் போட்டித் தன்மைக்கு இடையூறு ஏற்பட்டது. அந்த காரணத்தினால் விலை இணக்கப்பாட்டின் மீது ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மதியுரை சேவைக்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | அரசாங்கத்திற்கு அதிக பொருளாதார அனுகூலத்தை வழங்கும் மற்றும் அரசாங்க பெறுகைகள் செயன்முறையை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஐ.அ.டொ 5.86 மில்லியனான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | FIDIC நிபந்தனைகளின் உபபிரிவு 14.7 பிரகாரம், ஒவ்வொரு இடைக்கால கட்டணச் பத்திரங்களிலும் உறுதிப்படுத்தப்படட தொகையானது சேவை வழங்குனரால் 56 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். ஒப்பந்த நிபந்தனைகளின் உபபிரிவு 14.8 இன் பிரகாரம் தாமதக் காலத்தினுள் செலுத்தப்படாத தொகையின் மீது ஒப்பந்ததாரரிற்கு நிதிக் கட்டணமொன்றை பெற்றுக் கொள்ள உரிமை உண்டு. பொறியியலாளரினால் கொடுப்பனவு உறுதிப்படுத்தி இருந்த எனினும் மீளாய்வாண்டு இறுதியிலும் செலுத்தப்பட்டிருக்காத 03 பொதிகள் தொடர்பான இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,203 மில்லியனானதுடன் அந்த கொடுப்பனவுகள் மேற்குறித் எல்லையை விஞ்சி தாமதமான அதன் மீது கருத்திட்டங்களிற்கு மேலதிக செலவொன்றை செய்வதற்கு நேரிட முடியுமென அவதானிக்கப்பட்டது. | இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களுக்கு தாமதக் கட்டணத்தைப் பெற உரிமை உண்டு. | கொடுப்பனவு தாமதத்தை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முழு ஒப்பந்தப் பணிகளையும் முடிவுறுத்துவதன் மீது ரூபா 12,557 மில்லியனான தொகையை ஒப்பந்ததாரர்களுக்கு எதிர்காலத்தில் செலுத்த வேண்டியிருக்கும் என அவதானிக்கப்பட்டதுடன், நிலுவை இடைக்கால கொடுப்பனவு பத்திரங்கள் செலுத்தப்படாததால் FIDIC நிபந்தனைகளின் உபபிரிவு 16.1 இன் பிரகாரம் ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்த இடைநிறுத்த அறிவிப்புகளையும் வெளியிட்டிருந்தனர். மேலும் 2022 ஜூலை 31 திகதிக்கு ஒப்பந்த மதியுரையாளரிற்கும் ரூபா 238.91 மில்லியனான தொகையொன்று செலுத்தப்பட வேண்டியிருந்தது. இந்த நிதிப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமை எதிர்காலத்தில் கருத்திட்டத்தை முடிவுறுத்துவது சிக்கலான நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | தற்போது இந்த நிலுவைத் தொகையை முழுமையாக செலுத்தியுள்ளதுடன் ஒப்பந்ததாரர்கள் தங்களது ஒப்பந்களின் எஞ்சிய வேலைப் பகுதிகளை பெரும்பாலும் முடிவுறுத்தியுள்ளனர். | ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பிரகாரம் ஒப்பந்த கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிவேக நெடுஞ்சாலையின் இருபுறமும் பொருத்தப்பட்டிருந்த ஒலித் தடுப்புகளின் (Noise Barriers) வெளிப்புறத் தகடுகளில் பல்வேறு இடங்களில் துரப்பிடித்து காணப்பட்டன. 2022 மார்ச் 03 திகதி ITI நிறுவனத்தினால் நடத்திய பரீட்சிப்பு அறிக்கையின் பிரகாரம், தரமற்ற வண்ணப்பூச்சு பூசப்பட்ட கல்வனைஸ் (Paint - coated galvanized) தகரங்களால் ஒலித் தடைகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் உபபிரிவு 7.5 இன்படி அந்த குறைந்த தரமான ஒலி தடைகளை அகற்றவும் ஒப்பந்த ஆலோசகர் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | ஒலி தடையின் உள்ளக பொருட்கள் மூலம் ஒலி உறிஞ்சப்படுவதால் ஆலோசகரால் வெளிப்புற காப்பு மற்றும் அதனுள் உள்ளடங்கும் ஒலித் தடையின் உள்ளக பொருட்களிற்காக கொடுப்பனவுகளை குறைத்து மொத்த தொகையின் 43 சதவீதத்தை செலுத்த பரிந்துரைத்துள்ளார். | விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப நிரமாணம் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்து கொள்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதென. |
| (ஊ) | அதிவேக நெடுஞ்சாலைகளிற்கு சொந்தமான கட்டிடங்களின் சுவர்களில் (Toll buildings) மற்றும் பாதையின் மேற்பரப்பில் தார் தட்டின் சில இடங்களில் கோடுகள் ஏற்பட்டுள்ளமை மற்றும் பாதையின் மேற்பரப்பு சேதமடைதல் மற்றும் பாதையின் சீரற்ற மேற்பரப்பு (Uneven road surface) அநேகமானவை அவதானிக்கப்பட்டதால் தூண்களில் இயங்கும் பகுதிகளில் (Viaduct Areas) பாதையின் மேற்பரப்பில் கோடுகள் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்டதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த நடவடிக்கைகளில் தரத்தை பின்னூட்டல் செய்ய வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | கட்டிடம் மற்றும் பாதையில் தரத்தில் சிக்கல்கள் காணப்பட்ட வேலைப் பகுதிகளுக்கு உரிய கொடுப்பனவு அப் பகுதிகளை திருத்தும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான குறைபாடுகளை அறிவிக்கும் காலத்தில் குறைபாட்டு பட்டியல் மூலம் ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | தரமற்ற நிர்மாணங்களிற்கு கொடுப்பனவு செய்யக்கக்கூடாது |

### 3.5.2 மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் - கட்டம் 03

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.4 பிரிவின் பிரகாரம் எந்தவொரு பெறுகைகளிற்கும் உரிய ஒப்பந்தப் பொதிகளையும் பிரித்து வேறாக்கக்கூடாத (Splitting) போதும் ஒப்பந்தப் பெறுமதி ரூபா | தொழில்நுட்ப பன்முகத்தன்மை மற்றும உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் நிர்மாண ஒப்பந்தங்களுக்கான | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | 28,840 மில்லியனான கி.மீ 12 அளவு நீளமான அதிவேக நெடுஞ்சாலை பகுதியொன்றின் 17 பொதிகளின் கீழ் 14 உள்ளூர் ஒப்பந்த கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதனால் அவற்றில் 12 பொதிகளின் பெறுகைகள் அமைச்சரவை நியமித்த பெறுகைகள் குழுவிற்கு அனுப்புவதற்கு தவறிவிடப்பட்டிருந்தது. | தேவையான நிதிக் கொள்ளவு ஆகிய பிரமாணங்களின் மீது அந்த பொதிகள் பிரத்து வேறாக்கல் இடம்பெற்றன. | செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தத்தை வழங்குவதற்காக நெடுஞ்சாலைகளை பகுதிகளாகப் பிரிக்கும் போது சாலையின் கட்டமைப்பின் பிரகாரம் அதிக பெறுமதி கொண்ட 05 பொதிகளாகவும் (Cabinet Packages) மற்றும் 12 ஏனைய பொதிகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. மொத்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 28,895 மில்லியனானதுடன் 2022 சனவரி மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பொதிகள் அனைத்தும் 2023 ஜூலை மாதமளவில் முடிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் இந்தப் பொதிகளின் பௌதீக முன்னேற்றம் 01 சதவீதம் மற்றும் 42 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | ஒப்பந்த முன்னேற்றம் குறைவதற்கு நாட்டின் பொருளாதார நெருக்கடியின் மீது நாட்டில் நிலவும் நிலைமை முக்கிய காரணமாகும். | திட்டம் பிரகாரம் நிர்மாண முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மொத்த ஒப்பந்தப் பொதிகளுக்கும் ரூபா 3,713.81 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் பெரும்பாலான பொதிகளின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தமையினால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,707.29 மில்லியனான முற்பணத் தொகைகள் அறவிடப்படாது இருந்தன. | அந்த முற்பணங்களுக்கு ஒப்பந்ததாரர்கள் வழங்கிய வங்கி உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலம் மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தி முன்பண தொகையை அறவிட வேண்டும். |

### 3.5.3 மத்திய அதிவேக நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் - கட்டம் 04

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருணாகலையிலிருந்து தம்புள்ளை வரை கி.மீ. 58.6 நீளம் கொண்ட இக்கருத்திட்டத்தின் திருத்தப்பட்ட கிரய மதிப்பீடு ரூபா 179,830 மில்லியனாக இருந்ததுடன் 2015 முதல் தற்போது வரை பல்வேறு அமைச்சரவை முடிவுகளின் கீழ் பல்வேறு பெறுகைகள் முறைகள் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து நிதி மற்றும் ஒப்பந்த வேலைகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதும் அந்த அனைத்து செயற்பாடுகளும் தோல்வியடைந்திருந்தன. 6 ஆண்டுகளுக்கு அதிக காலம் கடந்திருந்த போதும் கடன் வழங்குனர் ஒருவர் இல்லாமல் கருத்திட்டம் இயங்கி வருகிறது. அவ்வாறே 2022 திசெம்பர் 31 திகதிக்கு கருத்திட்டத்தை முடிவுறுத்தி கலைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் 2016 ஆண்டில் கருத்திட்ட முகாமைத்துவ அலகை தொடங்கி மீளாய்வாண்டு இறுதியளவில் அதற்காக ரூபா 518.15 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு இறுதியளவிலும் கருத்திட்டத்தின் நிதியீட்டலிற்கு போன்றே ஒப்பந்தப் பணிகளைத் தொடங்குவதற்கும் முறையொன்று இல்லாதிருந்த போதும் 2016 ஆம் ஆண்டில் கருத்திட்ட முகாமைத்துவ அலகை தொடங்கி மீளாய்வாண்டு இறுதியில் கருத்திட்டத்திற்காக காணிகளை சுவீகரிப்பதுது தொடர்பான சேவைப் பணிகள் மற்றும் பெறுகை செயன்முறையொன்றை மேற்கொள்ளப்பட்டது. | கருத்திட்டம் தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுகள், கிரய நலன் பகுப்பாய்வுகள், சூழல் ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் நிதியீட்டல் தொடர்பான உறுதிப்பாட்டுடன் கருத்திட்டங்களைத் ஆரம்பிப்பது பொதுவான நடைமுறையாகும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதி கருத்திட்டத்தை 3,505 தனியார் காணி பகுதிகள் 1,550 அரசாங்க காணி பகுதிகளையும் சுவீகரித்துக் கொண்டிருந்தது. அவற்றில் 207 காணி பகுதிகளுக்கு ரூபா 339.71 மில்லியன் நட்டஈடாக வழங்கப்பட்டிருந்தது. எனினும் சட்டத்தின் 44 வது பிரிவின் கீழ் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் எவ்வித காணித் துண்டுகளையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சுவீகரித்திருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 திகதியளவில் எவ்வித காணித் துண்டுகளையும வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குக் ஒப்படைத்திருக்கவில்லை . | நட்டஈடு செலுத்தி முடிவுறுத்திய சவீகரிக்கப்பட்ட அரசு காணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால சுவீகரித்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5.4 ருவன்புற அதிவேக நெடுஞ்சாலை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மொத்த கிரயம் ரூபா 54,695 மில்லியனான ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டப் பணிகள் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பிரகாரம், கஹதுடுவ உள்ளக பரிமாற்றத்திலிருந்து பெல்மடுல்ல வரையிலான அதிவேக நெடுஞ்சாலையில் கி.மீ 73.9 மற்றும் கஹதுடுவ இலிருந்து இங்கிரிய வரையான பகுதியில் கி.மீ. 24.3 இன் நிர்மாணப் பணிகள் 2021 மே 03 திகதி நிர்மாணக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நிர்மாண பணிகள் 2023 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட இருந்தது. எனினும் அந்த நிர்மாணங்களை ஆரம்பத்து ஒரு வருடத்தின் பின்னர் பட்டியலிற்காக பணம் செலுத்தாததால் 2022 மே 10 திகதி முதல் ஒப்பந்ததாரர் தனித்தீர்மானத்துடன் நிர்மாணப் பணிகளை நிறுத்தி இருந்தார். நிர்மாண கம்பனியிற்கு முற்பணமாக வெட் வரியுடன் ரூபா 3,210 மில்லியன் 2021 ஜுலை 13 திகதி தேசிய சேமிப்பு வங்கியினால் பெறப்பட்ட கடனில் இருந்து செலுத்தியுள்ளதுடன் ஒப்பந்ததாரர் நிர்மாணத்தை நிறுத்தியதால் மேற்படி தொகையை மீள் அறவிட முடியாதிருந்ததுடன் இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கடனிற்காக 2022 ஜுன் 30 திகதி முறையே ரூபா 22.55 மில்லியன் மற்றும் ரூபா 264 மில்லியனான வட்டி செலுத்தப்பட்டிருந்தது. மெகா கருத்திட்ட மீளாய்வு மற்றும் துரிதப்படுத்தும் குழுவினூடாக (RAMP) 2023 சனவரி 31 திகதி கருத்திட்டத்தை முடிவுறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் கருத்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவு ரூபா 10,124 மில்லியன் ஆகும். கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஒரே தடவையில் | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் இந்த சுற்றாடல் தாக்கங்களை குறைத்துக் கொள்ள முடியுமாவதுடன் அந்த பரிந்துரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. | கருத்திட்டத்தைத் ஆரம்பிக்கம் சந்தர்ப்பத்தில் நிதியைப் பெறுவதற்கு கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுத்தப்பட்ட காரணத்தால் நிர்மாணத்திற்காக தோண்டப்பட்ட இடங்களில் நீர்குழிகள் ஏற்படல், ஆங்காங்கே குவிக்கப்பட்ட மண் குவியல்கள் காணப்பட்டதன் காரணமாக பயன்படுத்தப்படும் பாதைகள் தடைப்படல் நெற்பயிர்களை பயிரிட முடியாத நிலை போன்றதாக, பிரதேச் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் கணிசமான சமூக தாக்கங்களை ஏற்படுத்தி இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | அதிவேக நெடுஞ்சாலையில் கஹதுடுவ தொடக்கம் இங்கிரிய வரையான பகுதியின் 4 நிர்மாணப் பொதிகளின் கீழ் வெவ்வேறாக 4 நிர்மாண கம்பனிகளிற்கு வழங்குவதற்கான கேள்வி்விலை கோரப்பட்டு ஒப்பந்தம வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தீர்மானத்தை மாற்றி 4 பொதிகளையும் ஒரு ஒப்பந்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 4 பொதிகளின் அளவுத் பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ஆரம்ப செலவின கூட்டுத் தொகை ரூபா 7,070 மில்லியன் தொகையானது ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு முழுமையாக வழங்க தேவையில்லா போதும், ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், இதன் காரணமாக அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வீதி நிர்மாணம் மற்றும் அது தொடர்பான சேவைகளை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்தக்காரர்களின் பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு நழுவியிருந்து. | இங்கு டென்டர் அழைப்பித்த பின்னர் இந்த இந்த 04 பங்குகளிற்காவே மிகக் குறைந்த கேள்வி விலை முன்வைத்தது மாகா இன்ஜிநியரிங் கம்பனி ஆவதுடன் அதனால் 04 பொதிகளையும் குறைந்தபட்ட கேள்வி விலைதாரரான மாகா இன்ஜிநியரிங் கம்பனிக்கு அமைச்சரவை அனுமதியின் கீழ் வழங்க தீர்மானிக்கப்பட்டது. | உச்ச பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கிடைக்கும் வகையில் பெறுகைகளை நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். |
| (இ) | இந்த கருத்திட்டத்திற்கு தேவையான நிதியில் ரூபா 12,950 மில்லியனை கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை வங்கியுடன் உடன்பட்டு 2021 ஒக்டோபர் 11 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அதிகாரசபையினால் 2021 ஒக்தோபர் முதல் 2022 ஏப்ரல் வரை | நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய பட்டியல்கள் இலங்கை வங்கியிற்கு சமர்ப்பித்த போதும் உரிய பணம் இலங்கை வங்கியினால் | ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கும பட்டியல்களை உரிய நேரத்தில் தீர்ப்பதன் மூலம் கூடுதல் செலவுகளைத் தவிர்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 5,450 மில்லியனான ஒப்பந்த கம்பனிக்கு செலுத்த வேண்டிய இரண்டாவது முன்பணம் மற்றும் பாதை நிர்மாணத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்தப்படவில்லை. | விடுவிக்கப்படவில்லை. | |
| (ஈ) | முன்பணத்தைத் தவிர ஒப்பந்த கம்பனியினால் முன்வைத்த பட்டியல்களுக்கு ருபா 2,477 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளதுடன் அத்தொகையை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதன் மீது ஒப்பந்த உடன்படிக்கையின் 14.8 பிரிவின் பிரகாரம் தாமத காலத்திற்கு வட்டி செலுத்த வேண்டிய அபாயம் காணப்பட்டது. | ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனைகள் பிரகாரம் ஒப்பந்ததாரரிற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு தாமதமாக கட்டணம் செலுத்த வேண்டி நேரிடும். | பட்டியல்களை சரியான நேரத்தில் தீர்ப்பதன் மூலம் மேலதிக செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும். |
| (உ) | நிர்மாண கம்பனிக்கு ஒப்பந்த முற்பணமாக வெட் வரியுடன் ரூபா 3,210 மில்லியன் 2021 ஜுலை 13 திகதி தேசிய சேமிப்பு வங்கியால் பெறப்பட்ட கடனில் இருந்து செலுத்தப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத் தொகையை செலுத்தாததால் மற்றும் ஒப்பந்ததாரர் நிர்மாணத்தை நிறுத்தியதால் மேற்கூறிய தொகையை மீள் அறவிட முடியாதிருந்தது. | ஒப்பந்ததாரருக்கு செலுத்த வேண்டிய பட்டியல்கள் மற்றும் ஒப்பந்தம் தொடர்பான கோரிக்கைகள் (Claims) ஊடாக தீர்த்துக் கொள்ள முடியுமாவதுடன் இதுவரை இக் கொடுப்பனவு செலுத்தப்படவில்லை. | முன்பணத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5.5 கிராமீய வீதி மற்றும் பாலம் அபிவிருத்தி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) வாகனம் போக்கு வரத்து செய்ய முடியுமான பாலம் நிர்மாண திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,204 மில்லியனான 463 பாலங்களை நிர்மாணிப்பதற்காக அரச அபிவிருத்தி மற்றும் நிரமாண கூட்டுத்தாபனம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் இப் | வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 அடிப்படையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட 2022.04.29 திகதிய அறிவுறுத்தல்கள் பிரகாரம் நிர்மாணங்களை ஆரம்பிக்காத பாலங்களின் நிர்மாணப் | கருத்திட்ட இலக்குகளை அடைந்து கொள்ள திட்டமிட்டவாறு பௌதீக செயலாற்றுகையை பேணிக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாலங்களிற்கிடையில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்காத பாலங்கள் 175 ஆனதுடன் செயலாற்றுகை 25 சதவீதத்திற்கு குறைந்த பாலங்கள் 96 உம் 25-50 சதவீதத்திற்கு இடையிலான பாலங்கள் 46 உம் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 07 ஆகவிருந்தது. ஆனால், குறித்த திகதியில் பணிகள் தொடங்காமையும், நிர்மாணப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமையும், ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்டமையும், ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் குறைந்ததாலும் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டமையாலும் மக்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளதால் இத்திட்டத்தின் மூலம் அரசு அடைய எதிர்பார்த்த நோக்கம் மற்றும் பொதுமக்கள் நலன்களை அடைய முடியாத நிலையும் அவதானிக்கப்பட்டது. | பணிகளை நிறுத்துவதற்கும் கிராமிய பாலம் வேலைத்திட்டத்தை மறுசீரமைப்பதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார இஸ்திரமின்மையுடன் இந்த பாலம் நிர்மாண கருத்திட்டம் 2022 மார்ச் மாதத்திற்குப் பின்னர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் வடமேல் மாகாணத்திற்குரிய 41 பாலங்களுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணமாக (Mobilization Advance) ரூபா 87.18 மில்லியன் செலுத்தப்பட்டு இருந்த போதும், 2022 திசெம்பர் 31 திகதியளவில் மேலும் ரூபா 50.15 மில்லியன் முற்பணத் தொகையொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 48.81 மில்லியன் SD&CC நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முன்பணமானதுடன் ஒப்பந்தங்கள் இரத்து செய்யப்பட்ட 02 பால கருத்திட்டங்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 15.33 மில்லியனான வேலை ஆரம்பிப்பு முன்பணமும் 2022 திசெம்பர் 31 | SD&CC நிறுவனத்தினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கவுள்ள முன்பணத்திற்காக Advance Recovery Plane ஒன்றை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு மற்றும் அமைச்சுக்கு SD&CC நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை பிரகாரம் முன்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரையும் மீள் அறவிட்டிருக்கவில்லை. மேலும், 07 பால ஒப்பந்தங்களில் 04 ஒப்பந்தங்களின் பௌதீக முன்னேற்றம் 05 சதவீதத்திற்கும் 70 சதவீதத்திற்கும் இடையிலானதால் முன்பணத்தை அறவிடுவது நிச்சயமற்ற நிலையில் இருந்தது. | | |
| (ஆ) | குறைந்த கிரய பாலம் கருத்திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டில் கிரயம் ரூபா 1,500 மில்லியனான் 1,000 பாலங்களை நிர்மானிக்க திட்டமிட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியில் 33 பாலங்கள் மாத்திரம் நிர்மாணிக்க ஆரம்பித்திருந்ததுடன், 17 பாலங்களின் வேலைகள் மாத்திரம் முடிவடைந்திருந்தன. | 22 பாலங்களின் பௌதீக முன்னேற்றம் 30 - 100 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது. | கருத்திட்டத்தின் திட்டம் பிரகாரம் பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்ள வேண்டும். |
| (இ) | கிராமிய வீதிகள் திட்டத்தின் கீழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக நாடு முழுவதும் அடையாளங் கண்ட கிரயம் ரூபா 35,497 மில்லியனான் 38,718 கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிர்மாண ஒப்பந்தங்கள் உள்ளுராட்சி மன்றங்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் 6,423 கிராமப்புற பாதைகளின் ஒப்பந்தங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்ததுடன் அதன் முன்னேற்றம் 16 சதவீதம் என்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. மேலும், கிராமிய வீதி நிர்மாணக் கருத்திட்டத்தின் கீழ் பொலன்னறுவை மாவட்டத்தில் 29 வீதிகளுக்கு ரூபா 56 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும், பாதை நிர்மாண கருத்திட்டம் 05 மாத்திரம் நிர்மாணிம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தம் செய்யப்பட்ட பாதைகள் நிர்மாண 21 கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | கருத்திட்டத்தின் இலக்கு வைக்கப்பட்ட முன்னேற்றத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5.6 மாற்று வீதி 100,000 கி.மீ. அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்

2022 திசெம்பர் 31 திகதியில் நிர்மாணப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த பாதைகளின் அளவு கி.மீ. 17,847 ஆவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் பணிகளின் அளவு கி.மீ. 6,298 ஆகும். மேலும் நடைமுறை மற்றும் இடை நடுவே நிறுத்தியுள்ள தூரம் கி.மீ. 11,549 ஆனது. இந்தப் பணிகளுக்காக ரூபா 142,821 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இக்கருத்திட்டத்திற்காக உள்ளூர் வங்கிகளிடமிருந்து ரூபா 43,205 மில்லியன் மற்றும் அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 68,263 மில்லியன், திறைசேரி உண்டியல்களை வழங்குவதன் மூலம் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 35,940 மில்லியன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | பொலன்னறுவை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட 73 பாதை நிர்மாணக் கருத்திட்டங்களுக்குப் பயன்படுத்திய (RA-06/RA-16) ஒப்பந்த விகிதங்களில் குறைகள் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 106.85 மில்லியனால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | தேவையான திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பொலன்னறுவை மற்றும் குருணாகலை மாவட்டங்களினுள் அமுல்படுத்தப்பட்ட வீதி நிர்மாண ஒப்பந்தங்களுக்குத் தேவையான மண் (பரள்) ABC, எஸ்போல்ட் மற்றும் பிற்றுமின் பெற்றக் கொள்ளும் தூரங்களுக்கான விலைகளை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட தூரத்தின் அளவை மிகையாக காட்டிய காரணத்தால் 40 கருத்திட்டங்களின் மதிப்பீடுகள் ரூபா 55.18 மில்லியனால் மிகையாக மதிப்பிடப்பட்டுள்ளன. | பொருட்களின் போக்குவரத்து தூரம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது ஒரு பாதைக்காக அல்லாது அந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள அனைத்து பாதைகளையும் கவனத்திற் கொண்டாகும். | ஏற்றுக் கொள்ளப்பட்ட விகிதங்களைப் பயன்படுத்தி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பொலன்னறுவை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாதை நிர்மாணக் கருத்திட்டத்தில் பரிசோதிக்கப்பட்ட 05 பொதிகள் தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரகாரம் நியாயமான காரணத்தின் மீது கால நீடிப்புச் செய்யாது கொள்ளாது கருத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக மேலதிக நாட்களைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக அறவிட வேண்டிய ரூபா 86.57 மில்லியன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த கம்பனியின் கோரிக்கைகள் மதிப்பீடு செய்யப்படும் வரை தாமதக் கட்டணம் அறவிடப்படாததுடன் தற்போது மூன்று கருத்திட்டங்கள் தொடர்பாக உரிய கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின்படி தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் MOH/ACC/13/2022/07 மற்றும் 2023 பெப்ரவரி 24 திகதிய கடிதத்தின் பிரகாரம் KH-4618 கொண்ட கால் வண்டியின் மற்றும் CAA - 4928 கொண்ட ஜீப் வண்டியின் உரிமையானது நெடுஞ்சாலைகள் அமைச்சகத்திற்குச் சொந்தமான போதும், அவ் வாகனங்களின் பெறுமதி 2022 திசெம்பர் 31 திகதியன்று நெடுஞ்சாலை பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக இந்த இரண்டு வாகனங்களும் நெடுஞ்சாலைத் பிரிவின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டில்லாத துடன் இந்த ஆண்டு உட்படுத்த தேவையான நடவடிக்கைகளை செய்கிறேன். | சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | போக்குவரத்து அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எனினும் முன்னால் அமைச்சின் செயலாளர் ஒருவர் மற்றும் கணக்காளர் ஒருவர் நீர் வழங்கல் அமைச்சுக்கு எடுத்துச் சென்றிருந்த 02 மோடார் வண்டிகளை முறையாக அந்த நிறுவனத்திற்கு விடுவிக்க அல்லது அவ்வாகனங்களை மீண்டும் அமைச்சுக்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வாகனத்தை திருப்பித் தருமாறு பல சந்தர்ப்பங்களில் அறிவுறுத்திய போதிலும் அந்த விசாரணை தொடர்பான பதில்கள் இதுவரை கிடைக்கவில்லை. | முறையான வகையில் வாகனங்களை ஒப்படைக்க அல்லது மீள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.7 இழப்புகள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதிக்கு பதிவழிக்கப்படாது முன்கொண்டு செல்லும் மீதி ரூபா 0.487 மில்லியனானதுடன் இதில் ரூபா 0.404 மில்லியன் முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட இழப்புகள் மற்றும் தவிர்ப்புக்கள் ஆனதுடன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் அந்த நிலுவைகள் அறவிடப்பட அல்லது பதிவழிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | போக்குவரத்து பிரிவில் காணப்படும் வாகன இழப்பு மற்றும் தவிர்ப்புக்களை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பெற வேண்டிய நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | PF – 6319 கொண்ட கெப் வண்டியின் விபத்து காரணமாக ஏற்பட்ட ரூபா 0.37 மில்லியன் நட்டத்தை வாகனத்தின் சாரதியிடம் இருந்து அறவிடுமாறு பரிந்துரைக்கபட்டிருந்த போதிலும், 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை சட்ட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் இந்த விபத்து தொடர்பான நி.பி. 104(4) இறுதி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு விசாரணையுடன் தொடர்பான அறிக்கையை பெற்று காப்புறுதி நிறுவனத்தால் செலுத்தப்படாத தொகையை அறவிட சட்ட நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | KA – 1279 இலக்க ஜீப் வண்டியில் 2019 பெப்ரவரி 22 திகதி இடம்பெற்ற விபத்தின் காரணமாக 2022 செப்டம்பர் 07 ஆம் திகதி திருத்தத்திற்காக வாகனத்தை ஊர்திச் சாலைக்கு அனுப்பப்பட்டிருந்த போதும் திருத்த வேலைகள் தாமதமாகியதால் ரூபா 0.93 மில்லியனான காப்புறுதித் தொகையை வழங்க முடியாதென காப்புறுதி நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் திருத்த வேலைகள் முழுமையாக செய்யப்பட்டிருந்த போதும், 2023 பெப்ரவரி 28 திகதியளவிலும் வாகனம் ஊர்திச் சாலையில் காணப்பட்டதுடன் காப்புறுதிக் காப்புத் தொகை கிடைக்காத காரணத்தால் பணம் செலுத்த முடியாமலிருந்தது. விபத்து இடம்பெற்று 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் காப்புறுதிக் காப்புத் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் நி.பி. 104(4) பிரகாரம் இறுதி அறிக்கையையும் தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த திடீர் விபத்துக்குரியதாக தாமதமாகிருந்த திருத்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் காப்புறுதி காப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான மேலதிக பணிகள் காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொறுப்புவாயிந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | முன்னால் போக்குவரத்து அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரிற்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2022 மே 09 ஆம் திகதி சில கலகக்கார நபர்பளால் தீ மூட்டப்பட்டிருந்ததுடன் தீவைக்கப்பட்டதன் காரணமாக வாகனம் முற்றாக சேதமடைந்திருந்தது. வாகன விபத்து தொடர்பாக நி.பி. 104(4) பிரகாரம் நடவடிக்கை 2023 பெப்ரவரி 28 ஆம் திகதியளவிலும் மேற்கொண்டிருக்கவில்லை. | விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படாததால் கோப்பு மீதான நடவடிக்கைகள் தாமதமானது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் இழப்புகள் மற்றும் சேதங்கள் இனங்கண்டு பொறுப்புவாய்ந்த நபர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | போக்குவரத்து அமைச்சின் முன்னாள் அமைச்சர் ஒருவரின் ஊடகச் செயலாளருக்கு 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த அரசிற்குச் சொந்தமான ரூபா 0.17 மில்லியன் | இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது இறுதித் தீர்மானத்தின் பிரகாரம் | நிதிப் பிரமாணம் பிரகாரம் இழப்பை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியான மடிக்கணனி காணாமல் போனது தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது விசாரணைக் குழு இதற்கு ஊடகச் செயலாளரே பொறுப்பு கூறவேண்டுமென தீர்மானித்திருந்ததுடன் அவரிடமிருந்து அந்த நட்டத்தை ஒரு முறையில் அறவிட வேண்டுமென தீர்மானித்திருந்த போதும், 2022 திசெம்பர் 31 வரை அறவிட்டிருக்கவில்லை. இந்த அலுவலர் அமைச்சில் சேவையாற்றும் காலத்தினுள் அவரின் சேமலாப நிதியத்தின் கொடுப்பனவாக அமைச்சுக்கு கிடைத்திருந்த ரூபா 0.045 மில்லியனான தொகையை நிறுத்தி வைத்திருந்தது. | முன்னாள் அமைச்சர் ஒருவரின் ஊடகச் செயலாளரிடம் மடிக்கணனியின் பெறுமதியான ரூபா 170,400 தொகையை ஒரே முறையில் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | திடீர் விபத்தில் சிக்கிய மோடார் வண்டியொன்று ரூபா 6.15 மில்லியன் செலவில் அமைச்சினால் திருத்தியிருந்த போதிலும் அதற்கான செலவை காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து மீள்நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்காததனால் அப் பெறுமதி அரசிற்கு இழப்பாகியிருந்தது. எவ்வாறாயினும் அந்த இழப்பு தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய செயற்பாடு மேற்கொள்வது 2023 பெப்ரவரி 27 ஆம் திகதி வரையும் இடம்பெற்று இருக்கவில்லை. | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயந்திரவியல் பிரிவின் பணிப்பாளர் தலைமையில் இது தொடர்பான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நட்டத்தை குறித்த பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கான இலக்குகளுக்காக ஆயத்தமாதல்

### 4.1 நிலையேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காணல் மற்றும் மேற்கொள்ளும் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தித் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்கியதாக அமைச்சின் கிராமப்புற வீதிகள் பிரிவினால் 02 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு செயலாற்றுகை குறிகாட்டிகளை நிறுவியிருந்தது போதும், 2022 ஆம் ஆண்டினுள் புதிய கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாததால் அந்த நோக்கங்களில் முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 03 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் அமைச்சின் நெடுஞ்சாலைப் பிரிவினால் இனங்கண்டிருந்த போதும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் அந்த குறிகாட்டிகளின் முன்னேற்றம் 80 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்த போதும், இந்த குறிகாட்டிகளை அடைவதற்காக இனங்காணப்பட்டிருந்த ஒவ்வொரு கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட காரணத்தால் மேற் குறிப்பிட்டுள்ளவாறு முன்னேற்றம் 80-100 சதவீதமானது எவ்வாறென என்பது கணக்காய்வின் போது சர்ச்சைக்குள்ளானது. | மீளாய்வாண்டில் இலக்கு வைக்கப்பட்ட பாதைகள் மற்றும் பாலம் நிர்மாண முன்னேற்றம் எதிர்பார்த்த பிரகாரம் 100 சதவீத முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. | நிலைபேரான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5 மனிதவள முகாமைத்துவம்**

**5.1 இணைக்கப்பட்ட ஊழியர்கள், உள்ளவாறான ஊழியர்கள்**

அமைச்சின் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் ஆளணியினர் அமைப்பு பின்வருமாறு.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அட்டவணை கீழே) அமைச்சின் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் ஆளணியினர் அமைப்பு பின்வருமாறு.<br><br>அமைச்சின் ஆளணி மீதான பரீட்சிப்பின் போது இரண்டாம் மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 77 அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அமைச்சின் செயற்பணிக்கு நேரடியாக தாக்கம் செலுத்தாத | அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் மீது 2013 ஆம் ஆண்டில் 365 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சுக்கு இணைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக ஆளணி அங்கீகாரமும் கிடைத்திருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் அமைச்சில் நிறுத்தி வைத்துக் கொள்ள முடியாததால் அவர்கள் வசிக்கும் இடங்களில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களுக்கு | உண்மையான வெற்றிடங்கள் இனங்கண்டு முக்கிய பதவிகளிற்கு மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டியதுடன் தற்போது மேலதிகமாக காணப்படும் ஊழியர்களை ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும். |

| உத்தியோகத்தர் வகை | அனுதிக்கப்பட்ட ஆளணி | உண்மையான ஆளணி | வெற்றிடம்/மிகை |
|---|---|---|---|
| சீரேஸ்ட மட்டம் | 45 | 32 | 13 |
| மூன்றாம் நிலை மட்டம் | 02 | - | 02 |
| இரண்டாம் நிலை மட்டம் | 285 | 189 | 96 |
| ஆரம்ப நிலை மட்டம் | 43 | 20 | 23 |
| மொத்தம் | 375 | 241 | 134 |

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய அலுவலகங்களின் கடமைகளுக்காக அமைச்சிற்கு இணைப்பு செய்யப்பட்ட 63 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் 22 பேர்கள் மீளாய்வாண்டினுள் அமைச்சிற்று விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம், ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்ளும் போது சேவை தேவைப்பாடு தொடர்பாக உரிய மதிப்பீட்டுடன் மற்றும் சேவைத் தேவைப்பாட்டு பரிந்துரைகள் பொருத்தமற்றவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இணைக்கப்பட்டுள் ளனர். தற்போது அந்த அலுவலர்கள் காலத்திற்கேப்ப விடுவிக்கப்பட்டுள்ள துடன் தற்பொது எஞ்சியுள்ள அலுவலர்கள் . எண்ணிக்கை 63 மாத்திரமாகும்.